விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 31 திங்கட்கிழமை (16.09.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 271

# அடக்குமுறை தொடர்ந்தால் ஆயுதம் ஏந்த வேண்டி வரும்

## அடித்துக்கூறுகிறார் விக்னேஸ்வரன்



ஆளும் வர்க்கத்தின் கெடுபிடிகள் இனியும் தொடர்ந்தால் நாம் மீண்டும் ஆயுதமேந்த வேண்டிய நிலையே ஏற்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளரும் முன்னாள் நீதியரசருமான க.வி.விக்னேஸ்வரன் எச்சரித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## தனிநாட்டைக் கோரவில்லை ஜனாதிபதிக்கு கூட்டமைப்பு பதில்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றும் தனி நாட்டினைக் கோரவில்லை.

ஜனாதிபதி உட்பட தென்னிலங்கை தீவிரவாத சக்திகள் எமது தேர்தல் விஞ்ஞாபனத்தினை தெளிவாக வாசித்தறியாத காரணத்தினாலேயே பொருத்தமற்ற விமர்சனங்களை தெரிவித்து வருகின்றனர் என அக்கட்சியின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் எதைக் கேட்டார்கள் என்று ஜனாதிபதி சொல்லவில்லை. நாங்கள் தற்போது எதனைக் கேட்கின்றோம் என்றும் அவர் சொல்லவில்லை.

ஆனால் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துகின்ற வகையில் அவருடைய கருத்துக்கள் அமைந்திருக்கின்றன எனவும் தெரிவித்தார்.

யாழ்.மார்ட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கடந்த 11-ம் திகதி வவுனியாவில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக கருத்துக் கூறினார். அதன்போது தமிழீழ விடுதலைப்புலிகள ஆரம்பத்தில் கேட்டதையே இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கோரி (23ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவில் திரள தமிழர்கள் முனைப்பு

(வாஷிங்டன்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அமெரிக்க விஜயத்துக்கு எதிராக அமெரிக்க மற்றும் கனேடியத் தமிழர்கள் அணிதிரளத் தயாராகி வருவதாக தெரியவருகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 68-வது கூட்டத் தொடரில் பங்கெடுப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 23-ம் திகதி திங்கட்கிழமை நியூயோர்க் பயணமாகவுள்ளதாக தென்னிலங்கைச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் பொங்கு தமிழென சங்கே முழங்கு என்ற முழக்கத்துடன் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஒருங்கிணைப்பில் வட அமெரிக்கத் தமிழர்கள் (23ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு செயலரின் பணி முள்ளிவாய்க்காலுடன் நிறைவு

### ஐக்கிய பிக்குகள் முன்னணி தெரிவிப்பு

முள்ளிவாய்க்காலுடன் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பணிகள் முடிந்து விட்டதாகவும் அவர் தற்போது இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கிவிட்டு, அலுவலகத்திற்குள் இருக்க வேண்டும் எனவும் தேசிய பிக்கு முன்னணியின் தலைவர் தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர சந்திப்பொன்றில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் (02ஆம் பக்கம் பார்க்க)

கல்விக்கும் தொழிலுக்கும் வாக்களிப்போம்...
12
கோ.றுஷாங்கன்
(ஊடகவியலாளர், சிகரம் பணிப்பாளர்)
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாக
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி



## ஜனாதிபதி – கே.பி சந்தித்துப் பேச்சு

(கிளிநொச்சி)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளர் கே.பி என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதனுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது வடமாகாண தேர்தல், அபிவிருத்தி உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சந்திப்பு இரணைமடுவிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்திலேயே நேற்று முன்தினம் (23ஆம் பக்கம் பார்க்க)

வட மாகாண சபைத் தேர்தல் -2013
யாழ் மாவட்டம்
இலங்கைத் தமிழரசுக் கட்சி
X 18
தேசியம் – சுயநிர்ணயம் – சுயாட்சி
வட மாகாணத்தின் உட்கட்டுமான
அபிவிருத்திக்கு உங்கள் ஒரே தெரிவு
பொறியியலாளர்
வே. சிவயோகன்
18
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(E-063)



வட மாகாண சபைத் தேர்தல் -2013
யாழ் மாவட்டம்
ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா
துவாரகேஸ்வரன்
வட மாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்,
முதன்மை வேட்பாளரும்.
X 5



## பிரசாரம் புதன் நிறைவு

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் ஆகிய 3 மாகாணசபை தேர்தல்களுக்கான பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் நாளை மறுதினம் 18ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் நிறைவு பெறும் என தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தல்கள் விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு தான் பணித்துள்ள (23ஆம் பக்கம் பார்க்க)


வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013 – கிளிநொச்சி மாவட்டம்



1
பசுபதி
அரியரத்தினம்
(முன்னாள் மேலதிக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர்)



5
தம்பிராசா
குருகுலராசா
(கிளி/முல்லை மாவட்டங்களின் முன்னாள் கல்விப் பணிப்பாளர்)



7
சுப்பிரமணியம்
பசுபதிப்பிள்ளை
(செயலாளர் – இலங்கை தமிழரசுக் கட்சி, கிளி.மாவட்டம், முன்னாள் கிளி., முல்லை. கிராம சேவையாளர்)
எங்கள் தேசத்தை
நாமே ஆள
எமக்கே வாக்களியுங்கள்
இலங்கை தமிழரசுக் கட்சி
X
தமிழ் தேசியக் கூட்டமைப்பு

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பதவி வெற்றிடம்

CLERK (FEMALE)

A/L 3 பாடம் சித்தி
யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்
பிரதேசத்தவர்கள் மாத்திரம்.
கணினியில் நல்ல வேலை அனுபவம்

- தினமும் பி.ப. 6.30 மணி வரை பணியாற்ற வேண்டும்
- சனி, ஞாயிறு முழு வேலை நாளாகும், கிழமை நாட்களில் ஒருநாள் ஓய்வளிக்கப்படும்.
- நேர்முகத்தேர்வு - 17.09.2013 பி.ப. 5.30 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம்பெறும்.

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090




# பாதுகாப்பு செயலரின் பணி....

தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் கொள்கை விளக்க அறிக்கை தொடர்பாக விமர்சனங்களை முன்வைக்க வேண்டும்.

ஆனால் பாதுகாப்புச் செயலாளரின் விமர்சனங்கள் ஏற்றுக்கொள்ள கூடியவை அல்ல. நினைவில் வைத்து கொள்ளுங்கள் விளையாட்டு சரிப்பட்டு வராது என்றும் இது இலங்கை என்பதை நினைவில் வைத்து கொள்ளுமாறும் கோத்தபாய ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இதன்மூலம் தமிழ் மக்கள் வடக்கில் இருப்பது சிங்களவர்களின் அனுதாபம் காரணமாகவே என்று அவர் சொல்லாமல் சொல்கிறார். அத்துடன் அவரது பேச்சானது வடக்கு இலங்கையின் பகுதியல்ல என்பது போல் உள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் முள்ளிவாய்க்காலில் பெற்ற வெற்றியினை கொண்டு மாத்திரம் இவ்வாறான கருத்துக் களை வெளியிட்டு வருகிறார்.

முள்ளிவாயக்காலுடன் அவரது பணி முடிந்து விட்டது என்பதை அவர் நினைவில் வைத்து கொள்ள வேண்டும்.

இதன் பின்னர் இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கிவிட்டு அவர் தனது அலுவலகத்தில் இருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

துணியை தூக்கிக்கொண்டு சத்தமிட்டால் சரியாக இருக்காது எனவும் தம்பர அமில தேரர் குறிப்பிட்டுள்ளார். (எ-4)


## அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)**
**வட்டாரம் :- 09**
**பிப்பிலி றோட்**
**ஆதன இலக்கம் :- 178 (புதிய ஆதனம்)**

வட்டாரம் - 09 பிப்பிலிறோட் நவாலி ஆதன இலக்கம் 178ல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை "தொழும் கிழக்கு மாணாக்கையும் மாணாக்கை வளவும்" எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று (நி.பர.01) கொண்ட ஆதனம்) இவ்வாதனமானது யாழ்ப்பாணம் நவாலி வடக்கைச் சேர்ந்த சரவணை சின்னத்துரை என்பவரால் நன்கொடையாக சின்னத்துரை சந்திரகுமார் ஆகிய இவரால் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தரிஸ் நா.அரியபுத்திரன் முகதாவில் நிறைவேறிய 609ம் இலக்க 2010.01.24ம் திகதிய நன் கொடை உறுதிமூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இவ் "தொழும் கிழக்கு மாணாக்கையும் மாணாக்கை வளவும்" நிலப்பரப்பு 01 உள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் **சின்னத்துரை சந்திரகுமார்** என்பவர் பெயர்க்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றேன்.

**தவிசாளர்**
**வலி தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(3957)



உ ணவு, இருப்பிடம், ரிக்கெட் இலவசம்
மாதம் 200,000 /- வருமானம்

Netherland (ஹொலண்டில்)
படிக்க உழைக்க சட்ட ஆலோசனை

உணவு, இருப்பிடம், ரிக்கெட் இலவசம்
மாதம் 65000/- வருமானம்
வெறும் 3 லட்சம் மட்டுமே கட்டணம்

மலேசியாவில் படிக்க, உழைக்க அரியவாய்ப்பு
சட்ட ஆலோசனைக்கு விரைந்து வாருங்கள்

(எல்லா நாட்களும் காலை 8.30 - மாலை 6.30 வரை)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090



(C-4720)



SAVE 35,000 in Diploma

ACCA THE GLOBAL BODY FOR PROFESSIONAL ACCOUNTANTS

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஒரே ஒரு ACCA Gold Approved அங்கீகாரம்
பெற்ற நிறுவனம்

[ அதி சிறந்த கற்பித்தலுக்கான அங்கீகாரம் ACCA U.K]

K-AIMS

புதிய பிரிவுகள் 24th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA 0773 722 104, 021 221 9422
COLOMBO 0772 555 814

(த-4727)





# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இருள் சூழ்ந்த வாழ்வில் விடிவெள்ளியாய்
பிரகாசம் தந்த வள்ளல் பெருந்தகையே
இலங்கையின் வரப்பிரசாதமே எங்கள் அண்ணலே
அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா
என்றென்றும் வெற்றிப்பாதையை வென்றிடுவாய்
எம் மக்களின் சொத்தே உம் தொண்டு என்றும்
எமக்கெல்லாம் தேவை.



உலகமே போற்ற ஆட்சிசெய்யும்
அண்ணனே அண்டமெல்லாம் வியக்க
அறங்கள் பல ஆற்றுபவரே - எங்கள் அண்ணனே
ஐயாத்துரை - ஸ்ரீரங்கேஸ்வரனே
எம் மக்களை அரவணைத்து - என்றும்
ஆட்சி பீடம் ஏறும் எங்கள் வேந்தனே!
எம் மக்களின் மூச்சில் கலந்தவரே - உம்
நல் ஆட்சி வேண்டும் என்றென்றும்



காலை புலர்கிறது காலம் ஓடுகிறது என
ஏங்கித் தவித்த இளைய தலைமுறையின்
தலை எழுத்துக்களை மாற்றியமைத்த எம்
யாழ். மாவட்ட பொக்கிசமே
கந்தசாமி கமலேந்திரனே
நீர் வாழ்க! வளர்க!




*புதிதாக நியமனம் பெற்ற*
*சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்*
*வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி)*

(3955)

# தேர்தல் பிரசாரத்துக்கு இலக்க தகடுகள் அற்ற வாகனங்கள்

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக இலக்க தகடுகள் அற்ற வாகனங்களை சிலர் பயன்படுத்துவதாக கபே அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

தேர்தல் சட்டங்கள் மீறியமை தொடர்பில் இதுவரையில் 504 முறைப்பாடுகள் கிடைத் துள்ளதாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரி வித்துள்ளார்.

புத்தளம், குருநா கல், கம்பளை மற் றும் நாவலப்பிட்டி ஆகியபகுதிகளில்இல க்க தகடுகள் அற்ற வாகனங்கள் பயன் படுத்தும் நடவடிக்கை அதிகளவில் முன் னெடுக்கப்படுவதா கவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை சர் வதேச கண்காணிப் பாளர்கள் வடமாகா ணத்தை கண்காணி ப்பதற் காக அப்பகுதி க்கு செல்லவுள்ள தாக பவ்ரல் அமை ப்பின் நிறைவேற்று பணிப்பாளர்ரோஹன ஹெட்டியாராச்சி தெரி வித்துள்ளார். ஆசிய தேர்தல் கண்காணி ப்பு வலயத்தின்8கண் காணிப்பாளர்கள் இல ங்கைக்கு வரவழைக் கப்பட்டு அவர்களு க்கு பயிற்சிகள் வழங் கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

இதற்கமைய ஜப் பான்,தாய்லாந்து இந் தியா, நேபாளம், இந் தோனேஷியா, பங்க ளாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கண்காணிப் பாளர் கள் இதில் அடங்கு வதாக நிறைவேற் றுப் பணிப்பாளர் குறி ப்பிட்டுள்ளார்.

இதுவரையிலும் தமது அமைப்புக்கு 430 முறைப்பாடு கள் கிடைத்துள்ள தா கவும் பவ்ரல் அமை ப்பு சுட்டிக்காட்டியுள் ளது. (அ-2)


வடமாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்.மாவட்டம்
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி



இணைக்கப்பட்ட அரசியல் மூலம்
தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை
வென்று வறிய மக்களின் வாழ்வினை
ஒளிமயமாக்கிட வாக்களிப்போம்...

X 11

(EC/4874)

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினரும்
தென்மராட்சி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளரும்
குமாரு சர்வானந்தன் (சர்வா)





(E/009)

சீ.வீ.கே.சிவஞானம்
(முன்னாள் மாநகர சபை ஆணையாளர்,
துணைப் பொதுச் செயலாளர்-இலங்கைத் தமிழரசுக் கட்சி)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்



உங்களோடு வாழ்பவர்கள் நாங்கள்
உங்கள் தேவைகளை
அறிந்தவர்கள் நாங்கள்
எங்கள் கைகளைப் பலப்படுத்துங்கள்

5

ஈழமக்கள்
ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி.)



ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன்
(பருத்தித்துறை பிரதேச சபை
எதிர்க்கட்சித் தலைவர்) (E-066)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி
X 5



வடமாகாண சபைத் தேர்தல் 2013
(கிளிநொச்சி மாவட்டம்)
இலங்கைத் தமிழரசுக் கட்சி



X 3

டாக்டர் கந்தசாமி
திருலோகமூர்த்தி
(EC/4875)

தமிழினத்தின் தன்மானக் குரல்
கிளிநொச்சியின் உரிமைக் குரல்
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



வடமாகாண சபைத் தேர்தல் 2013
கிளிநொச்சி மாவட்டம்

எவர்க்கும் அஞ்சாமல்
எப்போதும் மக்களுக்காக
குரல் கொடுத்த....
வீ.ஆனந்தசங்கரி



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி)
X 2
(EC/4869)



ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு
வடமாகாண சபைத்
தேர்தல் 2013



X 4

எனது வெற்றி
உங்கள் வெற்றி..!
உங்கள் வெற்றி, உங்கள் சந்ததியின் வெற்றி
நம்பிக்கைக்குரிய தெரிவு
அண்ணன்
சிராஸ்
உங்கள் குரல்! எனது செயல்...!
www.voiceofseeras.com
(EC/4871)



எம்மண், எம்மக்கள், எம்முரிமை
உங்கள் தெரிவு
க.வி.விக்னேஸ்வரன்
(ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதியரசர்)
முதன்மை வேட்பாளர் - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு
(EC-4877)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
X 10



# வடக்கு வாழ் மலையக தமிழ் மக்கள் கூட்டமைப்பை ஆதரிக்க வேண்டும்

## மனோ கணேசன் கோரிக்கை



(கொழும்பு)

வடமாகாண சபை தேர்தலில் வீடு சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் வாழும் மலையக வம்சாவளி தமிழ் மக்களும் அணிதிரண்டு வாக்களிக்க வேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஹற்றன் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

வடக்கின் பிரதான மாவட்டங்களில் தென்னிலங்கை மாவட்டங்களை பூர்வீகமாக கொண்ட மக்கள் கணிசமாக வாழ்கின்றார்கள். இவ்வாறாக வடக்கில் வாழும் மலையக வம்சாவளி மக்கள், அங்கு வாழும் தமிழ்த் தேசிய இனத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும். இந்த உள்வாங்கல் பரஸ்பர அங்கீகாரத்துடன் சுமுகமாக நடைபெற வேண்டும்.

கடந்த காலங்களில் நிலவிய கண்ணியமான சமூக நிலைமையை குழப்புவதற்கு சிலர் இன்று திட்டமிடுகின்றார்கள். இதை இன்று வடக்கில் வாழும் மலையக வம்சாவளி மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

நடைமுறை கட்சி அரசியல் சிக்கல்கள் காரணமாகவும் புரிந்துணர்வு சிக்கல்கள் காரணமாகவும் மலையக வம்சாவளி தமிழ் மக்கள் வடகிழக்கு தமிழ்த் தேசிய பரப்பில் உள்வாங்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

வடக்கு வாழ் மலையக வம்சாளி மக்கள் தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களுடன் நான் காத்திரமான கருத்துப் பரிமாற்றங்களைச் செய்துள்ளேன்.

எனவே, இன்று கவனயீனம் காரணமாகவும் திட்டமிட்டும் உருவாக்கப்படும் முரண்பாடுகளைப் பெரிதுபடுத்தாது தமிழ்த் தேசிய உணர்வுடன் சிந்தித்து வாக்களியுங்கள் என வடக்கு வாழ் மலையக வம்சாவளி மக்களை நான் வேண்டுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்தேற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர்-II பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கும் திட்டம் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை குறித்த தினங்களில் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறவுள்ளது.

இதன்படி இன்று திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு திருநகர் மாணவர் படிப்பகத்திலும் முற்பகல் 11.30 மணிக்கு திருநகர் மாதா கோவில் பகுதியிலும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு சொலமன் வீதியிலும் 11.30 மணிக்கு கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு சோமசுந்தரம் வீதி பகுதியிலும், 11.30 மணிக்கு வை.எம்.சி.ஏ.கச்சேரியடியிலும் தொடர்ந்து எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு புனித சாள்ஸ் ஆரம்ப பாடசாலையிலும் 11.30 மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்திலும் 11 மணிக்கு சந்தனமாதா கோவில் பகுதியிலும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு கோவில் வீதியிலும் 11 மணிக்கு சுண்டுக்குளி பாடசாலை சந்தியிலும் 26 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு சுவாட்ஸ் லேன் பகுதியிலும் மேற்படி திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு நடமாடும் சேவையும் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# 500 ஏக்கர் காணியை சுவீகரிக்க திட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை தென்னமரவாடிப் பகுதியில் உள்ள சுவாமி மலைப் பகுதியில் 500 ஏக்கர் காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரியவருகிறது.

இவற்றில் 100 ஏக்கர் வரை தொல்பொருள் ஆய்வுத் திணைக்களத்திற்கும் ஏனைய 400 ஏக்கர் வரை பௌத்த பூஜா பூமி திட்டத்தின் கீழ் பௌத்த விகாரைக்கும் ஒதுக்கப்படவுள்ளது.

இதற்கான அளவையிடும் பணி விரைவில் இடம்பெறவுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கான ஏற்பாடுகள் பிரதேச செயலகமூடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை தென்னமரவாடிக்கு அருகில் உள்ள புல்மோட்டையில் உள்ள அரிசிமலை, நாகமலை போன்ற இடங்களில் உள்ள காணிகளும் எடுக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இந்நிலையில் கடந்த 2 ஆம் திகதி அரிசி மலைக் காணியை அளவிடச் சென்ற அளவை அதிகாரிகளை அளக்கவிடாது பொது மக்களும் மாகாண சபை உறுப்பினர் அன்வர், பிரதேச சபை உப தலைவர் தௌபீக் மற்றும் உலமா சபை பிரதிநிதிகள் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாக தெரியவருகின்றது. (அ-2)

## தங்கத்தை கடத்திய தம்பதியர் கைதாகினர்

585 கிராம் தங்கநகைகளை மறைத்து வைத்துக்கொண்டு வந்ததாக கூறப்படும் ஓர் இலங்கைத் தம்பதியனரை சென்னை விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகள் கைது செய்தனர்.

இந்தியா வடபழனியில் பிரபல வைத்தியசாலை ஒன்றில் கருவள சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக தாம் சென்னைக்கு வந்ததாக கூறிய இலங்கைத் தம்பதியரே கைது செய்யப்பட்டுள்ளனரென தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் சென்னைக்கு சென்ற இவர்களைச் சோதனையிட்ட போது, குறித்த குடும்ப பெண் தனது அந்தரங்க பகுதியில் தங்க நகைகளை மறைத்து வைத்திருந்ததை சுங்க அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-2)


பொருளியல் ஆசிரியர்

# S. வரதராஜன்

அவர்களிடமிருந்து

## ஓர் அவசர வேண்டுகோள்!

இலங்கை - இந்திய ஒப்பந்தமும் அதனால் உருவான மாகாண சபையும் தமிழ்மக்கள் மீது திணிக்கப்பட்டவை என்ற எனது நிலைப்பாட்டிலும், மாகாண சபை முறைமையால் தமிழ்மக்களின் அரசியல் அபிலாசைகளை எவ்வகையிலும் பூர்த்தி செய்ய முடியாது என்ற எனது நிலைப்பாட்டிலும் நான் இப்போதும் உறுதியாக உள்ளேன்.

இருந்தபோதும், தமிழ்மக்கள் நடைபெறவுள்ள வடக்கு மாகாண சபைத் தேர்தலில் பங்கேற்றுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து அதனை அமோக வெற்றி பெறச் செய்ய வேண்டியது ஒரு வரலாற்றுக் கடமையாக ஆகிவிட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி மூலம் மத்திய அரசாங்கத்தைக் கேள்விகளுக்கு உட்படுத்தக் கூடியதும், கூடுதல் அதிகாரங்களைக் கோரக் கூடியதுமான வல்லமையுடன் ஒரு மாகாண சபை உருவாகும் சரித்திர நிகழ்வு இடம்பெறப்போகிறது.

இந்த ஒரு காரணத்துக்காகவேனும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்து, வடக்கு மாகாண சபையைக் கூட்டமைப்பு கைப்பற்றுகின்ற ஒரு சூழலை உருவாக்க வேண்டும்.

அதே போன்றே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களில் ஒருவரான திரு **பொ. ஐங்கரநேசன்** அவர்களையும் பெரு வெற்றிபெற வைக்குமாறு வேண்டுகிறேன்.

இவர் தேர்தலுக்காக அரசியல் மேடைகளில் தமிழ்த் தேசியம் பேசுபவர் அல்லர்; அன்றும் தமிழ்த் தேசியத்தோடு இருந்தவர் - இன்றும் இருப்பவர் - என்றும் இருப்பார்.

இவர் இந்த மண்ணின் அபிவிருத்தி என்பது இன்றைய சந்ததிக்கு மட்டும் நன்மை தருவதாக அமையாது, எமது எதிர்காலச் சந்ததிகளும் பயன் பெறக்கூடிய நிலைத்த அபிவிருத்தியாக அமைய வேண்டும் என்று சிந்திக்கின்ற ஒரு சூழலியலாளர்.

1990களில் இருந்து நாம் இருவரும் இணைந்து தமிழ்த் தேசியச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்கள் என்றவகையில், அவர் அடுத்த தேர்தலைப் பற்றிச் சிந்திக்கின்ற அரசியல்வாதி அல்லர்; அடுத்த தலைமுறையைப் பற்றிச் சிந்திக்கின்ற ஓர் அரசியற் போராளி என்று நான் அழுத்திச் சொல்லுவேன்.



**என் இனிய மாணவர்களே! அவர்களின் பெற்றோர்களே! உறவுகளே!**

முதற்புள்ளடியை **வீட்டுச் சின்னத்துக்கு** நேரேயும் இரண்டாவது புள்ளடியைத் திரு **பொ. ஐங்கரநேசன்** அவர்களின் விருப்புவாக்கு இலக்கமான **2** இன் மேலேயும் இட்டு அமோக வெற்றிபெறச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

சுதந்திரத்துடன் கூடிய அபிவிருத்திக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

அன்புரிமையுடன்

**S. வரதராஜன்,**

பொருளியல் ஆசிரியர்,

முன்னாள் விரிவுரையாளர்,

பேராதனைப் பல்கலைக்கழகம்.

**முதற்புள்ளடி வீட்டுக்கு**

**இரண்டாவது புள்ளடி இரண்டுக்கு**

(CE/4883)

## வடக்கு மாகாணசபைத் தேர்தல்- 2013

யாழ்.மாவட்டம்



தமிழ் மண் காப்போம்!
தாயகம் மீட்போம்!!

**எம்.கே.சிவாஜிலிங்கம்**

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

9

| | | |
|---|---|---|
| இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | ⌂ | X |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | (E-011) |

## வட மாகாண சபைத் தேர்தல் -2013

## முல்லைத்தீவு மாவட்டம்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

மக்களின் தேவை,
உரிமை, அபிவிருத்தி
அதுவே எனது சேவை

இலங்கை தமிழரசுக் கட்சி

**ஆண்டியையா- புவனேஸ்வரன்**

(அகில இலங்கை சமாதான நீதவான்)

X 1

(E058)

## வடமாகாண சபைத் தேர்தல்-2013

## யாழ்ப்பாண மாவட்டம்



**பா. கஜதீபன்** (ஆசிரியர்)

தலைவர், இளைஞர் அணி,
தமிழரசுக் கட்சி.

**17**

தடைகளை உடைத்து
உரிமைகளைப் பெற்றிட
நம்மை நாமே ஆழ்ந்திட
ஆதரிப்போம் தமிழ் அரசை

(E/054)

இலங்கைத் தமிழரசுக் கட்சி
(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)

X 17

ஆதரவாளர்கள்
தமிழரசுக் கட்சி
மானிப்பாய் தொகுதி

## வடமாகாண சபைத் தேர்தல் 2013

## முல்லைத்தீவு மாவட்டம்



**வீ.கனகசுந்தரசுவாமி**

(ஓய்வுபெற்ற கிராம அலுவலர்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

போரினால் சிதைக்கப்பட்ட முல்லைத்தீவு
மாவட்டத்தினை மீண்டும் கட்டி எழுப்பி எம்மை
நாமே ஆட்சி செய்திட சிந்தித்து வாக்களிப்பீர்...


4

| | | |
|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | ⌂ | X |

(E-045)

# வட மாகாணசபைத் தேர்தல் 2013

# யாழ் மாவட்டம்



தடைகளைத் தாண்டி
உரிமைகளை
வென்றிட....



(EC/4883)

எமக்கு ஓர் சர்வதேச விவகார நிபுணர்

கலாநிதி **கந்தையா சர்வேஸ்வரன்**

B.A Hons (Pol Sc), M.A., Ph.D விரிவுரையாளர்

X 4

இலங்கைத் தமிழரசுக் கட்சி

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# இன்று ஒரு தகவல்

## உயிர் நம் கையில்

கொஞ்ச நாளைக்கு முன் ஒரு சினிமாப்படம் பார்த்தோம். அதில் ஒரு காட்சி! அதாவது, ஒருவர் மரணப் படுக்கையில் கிடக்கிறார். அவருடைய மகன் வெளிநாட்டிலிருந்து வருகிறான். வந்து அப்பாவைப் பார்க்கிறான். அப்பாவும் மகனைக் காண்கிறார். அவர் மெதுவாக வாயைத் திறந்து, "உன்னை ஒரு தரம் பார்த்துவிட்டு கண்ணை மூடலாம் என்றுதான் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இருந்தேன்" என்கிறார். அதேமாதிரி மகனைக் கண்டதும் கொஞ்ச நேரத்தில் கண்ணை மூடி விடுகிறார்.

அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு, திரும்பி வரும்போது ஒரு நண்பர் "சினிமாவில்தான் இப்படியெல்லாம் நடக்கும்! நடைமுறையில் அது சாத்தியமில்லை. வேளை வந்தால் போய்ச்சேர வேண்டியது தான்" என்றார்.

இவர் சொல்வதும் சரியென்றுதான் நமக்குத் தோன்றும்! ஆனால், கலிபோர்னியாவில் நடந்த ஒரு ஆராய்ச்சியின் முடிவு வேறுமாதிரி இருக்கிறது.

"மரணத்தைக் கொஞ்சம் தள்ளிப்போட வேண்டுமா? அது மனிதனால் முடியும்!" என்கிறது இந்த ஆராய்ச்சி. சரி! எவ்வளவு காலம் தள்ளிப்போட முடியும்? என்று கேட்டால் ஒரு குறிப்பிட்டகாலம் வரைக்கும் அது முடியும் என்கிறார்கள்.

அடுத்து வரப்போகும் ஒரு முக்கியமான நாள்வரைக்கும் நாம் இருக்க வேண்டும் என்று நினைத்தால் அது முடியுமாம். உதாரணத்துக்கு ஒருவர் மரணப்படுக்கையில் இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவரது மகனுக்கு இன்னும் 10 நாட்களில் கல்யாணம் நடக்கப் போகிறது! அல்லது அவர்களின் குடும்பத்தில் ஏதோ ஒரு விஷேடம் நடக்கப் போகிறது!

சாகக் கிடக்கிறவர் அந்த சந்தோஷத்துக்காக காத்திருக்க ஆரம்பித்து விட்டார் என்றால் அவருக்கு உயிர் போகாதாம்!

சீனாவில் அறுவடை திருநாளை சனங்களெல்லாம் மிகவும் சந்தோஷமாக கொண்டாடுவார்களாம்! அந்த அறுவடைத் திருநாளுக்கு ஒருவாரம் முதல், சாராசரியாக இறப்பவர்களின் எண்ணிக்கை 35 சதவீதம் வரைக்கும் குறைகிறதாம்!

ஆனால், அறுவடை திருநாளை தொடர்ந்து வரும் அடுத்த வாரத்தில் இறப்பு 35 சதவீதம் வரைக்கும் அதிகமாகிறதாம்!

ஒரு சந்தோசமான திருவிழாவுக்கு முன்வாரத்தில் இறப்பு விகிதம் குறைவதற்கும் அதற்குப் பின்னர் இறப்பு விகிதம் அதிகமாவதற்கும் என்ன காரணம் என்று சொல்லி ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள்.

ஒரு மகிழ்ச்சியான விடயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போது மரணத்துடன் போராடுபவர்களின் மன வலிமை அதிகரிக்கின்றதாம்.

"அந்த மகிழ்ச்சியான அனுபவத்தை நாம் இழந்து விடக்கூடாது" என்ற எண்ணம் மேலோங்கி மன ஆதிக்கம் உடம்பின் மீது ஆக்கிரமிக்கும் போது மனதில் இருக்கும் விருப்பமும் ஆசையும் நிறைவேறும் வரைக்கும் மரணம் கிட்டவும் நெருங்குவதில்லையாம். ஆனால் ஒரு விடயம் இதற்கு அதிகமான மனோதிடம் மிகவும் அவசியம்! இது ஒரு பத்திரிகையில் நான் பார்த்த குறிப்பு. இதை எத்தனை பேர் ஒத்துக் கொள்வீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

இருந்தாலும் இப்பொழுதும் கடைசிநேரத்தில் வைராக்கியமாக இருந்து நினைத்ததை சாதித்துவிட்டு மேலே போகிறவர்கள் உண்டு. அதைப்பலர் அனுபவத்தில் கூட பார்த்திருக்கலாம்.

ஒரு பெரியவர் மரணப்படுக்கையில் இருந்தார். அவரின் மகன் வெளிநாட்டிலிருந்து வந்துகொண்டிருந்தான். டாக்டர் அவருக்கு தீவிர சிகிச்சை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது அவர் டாக்டரைப் பார்த்து,

"என் பையன் இங்கு வந்து சேரும் வரைக்கும் நான் இருப்பேனா டாக்டர்!" என்று கேட்டார். "நான் இருக்கிறேன்! கவலைப்படாதீர்கள்!" என்றார் டாக்டர். அதற்குப் பெரியவர், "நீங்கள் இருப்பீர்கள் டாக்டர் ! நான் இருப்பேனா? என்று கேட்டேன்!" என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# இலங்கையின் கடற்பரப்பு சீனாவிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது-ரணில்

இளவரசன் விஜயன் இந்தியாவில் இருந்து தற்காலத்தில் இலங்கைக்கு வந்திருந்தால் சீனாவின் படகுகள் சென்று அவரை விரட்டியிருக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவில் இருந்து இளவரசன் விஜயன் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை வந்தார். ஒரு வேளை அவர் இன்று இலங்கைக்கு வந்திருப்பாராகில் இலங்கை கடல் பகுதி சீனர்களுக்கு தற்பொழுது குத்தகைக்கு விடப்பட்டுள்ளமையால் சீனாவின் படகுகள் அவரை இங்கிருந்து விரட்டியடித்திருக்கும்.

இலங்கையிலுள்ள மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை பெறமுடியாது பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள நிலையில், இலங்கை கடற்பரப்பில் வெளிநாட்டு கப்பல்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன.

மன்னார்பக்கம் போனால் இந்திய மீனவ படகுகள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. புத்தளம் கடலுக்கு சென்று சீனக் கப்பல்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. இவர்களுக்கிடையில் இலங்கை மீனவர்கள் எப்படி தமது மீன்பிடி தொழிலில் ஈடுபடுவது?

அரசாங்கம் கடலை சீனாவுக்கு குத்தகைக்கு கொடுத்து விட்டு அதற்கு பதிலாக தண்ணீர் விநியோக குழாய் யோசனை திட்டத்தை பெற்றுள்ளது. இலங்கை மீனவர்கள் மீன் பிடித்தாலும் அதனை உரிய விலைக்கு விற்பனை செய்ய முடிவதில்லை. வேறு நபர்கள் வந்து விலைகளைக் குறைத்து மதிப்பிடுகின்றனர்.

அதிகாரிகள் தமது சட்டைப் பைகளை நிரப்பிக்கொள்ள மக்களின் சட்டைப் பைகள் வெற்றுப் பைகளாகின்றன.

வாழ்க்கைச் செலவை குறைப்பதாகவும் வருமானத்தை அதிகரிப்பதாகவும் அரசாங்கம் கூறியது. வருமானத்தை கூட்டவும் இல்லை. மக்களின் வாழ்க்கைச் செலவு குறையவுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# கிளிநொச்சி செஞ்சோலைக்கு ஜனாதிபதி மஹிந்த விஜயம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் தமிழீழ வீடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் சர்வதேச பொறுப்பாளர் கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதனுக்குமிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வடமாகாண சபைத் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்களில் ஜனாதிபதி நேற்றுமுன் தினம் கலந்து கொண்டார்.

இதன்போது கிளிநொச்சி, இரணைமடுவிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் இச் சந்திப்பு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சந்திப்பின் போது வடமாகாண தேர்தல் , அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

செஞ்சோலை சிறுவர் இல்லத்துக்கு சென்ற ஜனாதிபதி சிறுவர்களுக்கான கல்வித் தேவைகள் குறித்து கேட்டு அறிந்து கொண்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச பொறுப்பாளரும் அவர்களின் ஆயுத முகவராகவுமிருந்து வந்த கே.பி. போர் முடிவுக்கு வந்த பின்னர் வெளிநாடொன்றில் வைத்து கைது செய்யப்பட்டார்.

தற்போது அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் அவர், அரசசார்பற்ற நிறுவனமொன்றை நடத்தி வருகிறார். (அ-2)

# வீதியை புனரமைக்குக

(பொற்பதி)

வடமராட்சி அல்வாய் வடமத்தி வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாதுள்ளமையால் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாக இப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதிப்பகுதி சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரமுடையது. ஆனால் இப் பகுதியில் வீதி ஒன்று இருப்பதற்கான அடையாளமாக சிறிய கற்களே காணப்படுகின்றன. இவ்வாறு முற்று முழுதாக அழிவடைந்துள்ள இதனை துரிதகதியில் செப்பனிட்டு தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-64)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 50 | 40 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 - 140 | 110 | 110 |
| பச்சைமிள்காய் | 50 | 60 | 50 | 70 |
| தக்காளி | 120 | 70 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 50 | 40 |
| கோவா | 60 | 60 | 80 | 60 |
| கரட் | 60 | 80 | 80 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 180 | 120 - 140 | 140-180 | 160 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 | 130 | 90 |
| பாகற்காய் | 50 | 70 | 60 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 80 | 70 |
| பயற்றங்காய் | 140 | 140 | 80 | 100 |
| லீக்ஸ் | 100 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 10 | 150 | 40 | 40 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 30 | 60 | 120 | 80 |
| போஞ்சி | 120 | 110 | 100 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 25 | 30 | 25 |
| தேசிக்காய் | 150 | 240 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 - 50 | 50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 | 160 |

# இராசி பலன்

*16.09.2013*
*(ஆவணி 31, திங்கட்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு*
*துவாதசி முன்னிரவு 10.46 மணிவரை*
*திருவோணம் முன்னிரவு 10.30 மணிவரை*
*இராகுகாலம் 7.33-9.03மணிவரை*
*சுபநேரம் 12.03-1.33 மணிவரை*
*அமிர்தசித்தம்*

**மேடம்** தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும், காரிய நன்மையுண்டு, ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், புதிய திட்டங்கள் கைகூடும், ஆன்றோர் சந்திப்புண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், பேச்சில் நிதானம் தேவை, எடுத்த முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை.

**கடகம்** உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், செய்தொழில் மேன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு, அபூர்வ சந்திப்புண்டு, உற்சாகமான நாள்.

**சிங்கம்** பகைவர்கள் விலகுவர், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், நோய்கள் குணமாகும், தன்னம்பிக்கை அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும், பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** நீண்ட நாட்களாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள், தாய் வழி ஆதரவு பெருகும், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம், ரோக பயமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், வாக்கு மேன்மையுண்டு, இனிய அனுபவங்கள் ஏற்படலாம், பாராட்டும் புகழும் கூடும், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர்.

**தனுசு** அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், மாதர் நட்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்** ஆழ்ந்த சிந்தையுண்டு, வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள், உடல்நலம் சீராகும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், சயன சுகமுண்டு, பெரியோர் சந்திப்புண்டு.


**கும்பம்** சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், பிதா சிந்தையுண்டு, சயன சுகக் குறைவான நாள், சுப விரயங்கள் கூடும், முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்.

**மீனம்** செய்தொழில் மேன்மையுண்டு, குடும்பத்தில் குதூகலம் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு, கௌரவமான சம்பவங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும்.

வளவன்

# அரசால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் ஐ.தே.கட்சியையே ஆதரிப்பர்

## ஐ.தே.க.வேட்பாளர் கலாநிதி ஐ.எம். இல்யாஸ்



(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் எவரும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றிலைக்கு வாக்களிக்க மாட்டார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளரான முன்னாள் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஐ.எம். இல்யாஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ். நல்லூர் சங்கிலியன் தோப்பில் அண்மையில் இடம்பெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் மாகாண சபை முறைமையை ஐ.தே.கதான் கொண்டு வந்தது. அப்போது அதனை எதிர்த்து போராடியவர்கள் தற்போது அதே மாகாண சபை அதிகாரத்திற்காக தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு தெரிவு செய்யப்பட உறுப்பினர்கள் உட்படகட்சி ஆதரவாளர்கள்எனப் பலரைக் கொலை செய்த ஜே.வி.பி யினரும் தற்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் போட்டியிடுகின்றனர்.

ஐ.தே.கவைப் பொறுத்தவரை எந்தவொரு குற்றச் செயல்களிலும் ஈடுபடாதவர்களே தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இது எமக்கு பெரும் வெற்றியைப் பெற்றுத்தரும் எனவும், பள்ளி வாசல்களையும் முஸ்லிம் பெண்களின் கலாசார உடையான பர்தாவைப் பாதுகாக்கின்ற செயற்பாடுகளிலும் தொடர்ந்து போராட ஐ.தே. க.விற்கே முஸ்லிம் மக்கள் வாக்களிப்பார்கள்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆயுட் காலம் முழுவதும் ஜனாதிபதியாக இருக்கக் கூடிய சட்டத்தை 18 ஆவது திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றில் கொண்டு வந்த போது, அரசுக்கு சார்பாக ஆறு வாக்குகள் குறைவாகயிருந்த நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிதான் அந்த வாக்குகளைக் கொடுத்து அரசாங்கத்திற்கு ஆதரவளித்தது.

இதனாலேயே சாகும் வரை ஜனாதிபதியாக யிருக்கும் சந்தர்ப்பம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்தது.

இது விடயத்தில் முஸ்லிம் காங்கிரஸ் வரலாற்று துரோகம் ஒன்றை செய்துள்ளது எனவும் குறிப்பிட்டார். (அ-6)


















# பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது குறித்து இந்தியா நிபந்தனைகளை விதிக்கவில்லை

## திட்டவட்டமாக மறுக்கிறது இலங்கை





**(கொழும்பு) கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்கு, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளதாக வெளியான தகவல்களை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.**

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கை வெளிவிவகாரச் செயலர் கருணாதிலக அமுனுகம,

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற்கு மூன்று நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என்று இந்திய தரப்பில் இருந்து எந்த தகவலும் கிடைக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

குறித்த மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்கக் கூடாது என்று தமிழ்நாட்டில் இருந்து தொடர்ச்சியாக அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின், தனிப்பட்ட அழைப்பு மன்மோகன் சிங்கிடம் நேரில் கையளிக்கப்பட்ட போதிலும், கொழும்பு வருவது குறித்து அவர் இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை என தெரியவருகின்றது.

இதேவேளை, கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளும் உச்சி மாநாட்டில் பங்கேற்க இந்திய பிரதமர் மன்மோகன் சிங் சில நிபந்தனைகளை இலங்கை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளதாகவும் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதாக இலங்கை அரசாங்கம் உறுதியளித்தால் மட்டுமே மாநாட்டில் தான் கலந்து கொள்ளமுடியும் என இராஜதந்திர மட்டத்தில் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் இலங்கை அரசாங்கத்தின் சிரேஷ்ட அரசியல் வாதிகள் உறுதிப்படுத்தியதாக லக் பிம தெரிவித்துள்ளது.

அதில் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 4 ஆவது பிரிவில் உள்ள விடயங்கள் நிறைவேற்றுதல்.


ஊடக சுதந்திரம், ஜனநாயகத்தை பாதுகாத்தல், நல்லாட்சியை பாதுகாத்தல் ஆகிய நிபந்தனைகளை இந்தியா விதித்துள்ளது.

அத்துடன் உடனடி நடவடிக்கையாகவடக்குஉட்படமூன்று மாகாணங்களின் தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்த வேண்டும் என்றும் இந்தியா, இலங்கைக்கு அறிவித்துள்ளது.

இந்நிலையில் இது சம்பந்தமாக உடனடியாக இராஜதந்திர ரீதியில் உறுதிமொழிகளை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகி இருப்பதாக அரசாங்கத்தின் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக லக்பிம கூறியுள்ளது.

இதனிடையே பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு தொடர்பாக கலந்துரையாட இந்திய பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை செல்லவுள்ளது. (அ-2)

# உலகின் வயதான மனிதர் ஷார்ட்டி மரணமானார்



உலகிலேயே மிக அதிக வயதான மனிதரான ஷார்ட்டி (வயது 112) காலமானார்.

இவர் ஸ்பெயின் வம்சாளியைச் சேர்ந்த வராவார். செல்லமாக ஷார்ட்டி என்று அழைக்கப்படும் இவர் அமெரிக்காவின் நியூயோர்க்கில் வசித்து வந்தார்.

கடந்த 1901 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8 ஆம் திகதி ஸ்பெயினிலுள்ள கிராமம் ஒன்றில் இவர் பிறந்தார். தனது நண்பர்களுடன் கடந்த 1918 ஆம் ஆண்டில் கியூபா சென்றவர் அங்குள்ள வயல்களில் இரண்டு ஆண்டுகள் வேலை செய்த பின்னர் எல்லிஸ் தீவு வழியாக அமெரிக்காவுக்கு வந்தார்.

கடந்த 1934 ஆம் ஆண்டு அவர் பேர்ல் என்ற பெண்ணை திருமணம் செய்தார். இதனை தொடர்ந்து இவர் உலகின் மிக அதிக வயதான மனிதராக கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்து சாதனை படைத்தார்.

இந் நிலையில் இவரது உடல் நிலை சீரின்மை காரணமாக நியூயோர்க் அருகே உள்ள கிராண்ட் தீவில் உள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட் டார்.

ஆனால் சிகிச்சை பலனின்றி கடந்த 13 ஆம் திகதி இவர் மரணம் அடைந்தார். (அ-2)

# தனக்கு ஏற்படும் சங்கடத்தை குறைக்கவே விஞ்ஞாபனத்தை வசைபாடுகிறார் மஹிந்த

## சம்பந்தன் எம்.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் நாட்டை பிரிப்பது போன்று அமைந்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ள கருத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் முற்றுமுழுதாக மறுத்துள்ளார்.

ஒருமித்த நாட்டுக்குள், நாடு பிளவுபடாது இணைந்த வட, கிழக்கில் சுயாட்சி அடிப்படையில் தமிழ் மக்களும் தமது இறைமையை பயன்படுத்தும் வகையில் அரசின் தீர்வுத் திட்டம் அமைய வேண்டும் என்பதையும் அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தென்மராட்சி -மட்டுவில் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

ஆட்சியளார்களும், தீவிரவாத பெரும்பான்மையினரும் மக்களைக் குழப்பும் வகையிலான தவறான கருத்துக்களை முன்வைத்து வருகிறார்கள்.

இவ்வாறான தவறான பிரசாரங்கள் ஊடாக தமிழ் மக்களை ஏமாற்றுவது கடினம். சர்வதேசத்தையும் அவர்கள் ஏமாற்ற முற்படுகிறார்கள். ஆனாலும் அது அவர்களால் முடியாது. அவ்வாறு ஏமாற்ற நினைப்பது தவறு என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அதுமட்டுமன்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வொன்றை வரைவதற்கு விருப்பமில்லை. அவ்வாறான கருத்தை யாராவது முன்வைத்தால், அதற்கு எதிரான கருத்துக்களைக் கூறி அதனைக் குழப்ப முற்பட்டு வருகிறார்.

இவ்வாறான நிலையில், கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தை தமிழ் மக்கள் ஆதரித்தால், அது தனக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தி விடும் என அவர் நினைப்பதாக எனக்குத் தோன்றுகிறது என்றார். (அ-2)

# வன்னி தேர்தல் பிரசாரத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள்

## சிவசக்தி ஆனந்தன் முறைப்பாடு

(குருமன்காடு)

மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த 11 சமுர்த்தி முகாமையாளர்களும் வவுனியா மாவட்டத்தில் புதிதாக நியமனம் பெற்றுள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளதாக வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தேர்தல் கண்காணிப்பகத்திற்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இம் முறைப்பாட்டு கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான ஒருவர், வன்னி மாவட்டத்தில் செயலாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களிடம் எதிர்வரும் வடமாகாண சபைத் தேர்தலில் அரசாங்கக் கட்சி வேட்பாளர்களுக்கு அவர்களை வாக்களிக்குமாறு வற்புறுத்தியுள்ளதுடன் அவர்கள் கடமை புரியும் கிராமங்களைச் சேர்ந்த மக்களும் ஆளும் கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிக்கக்கூடிய வகையில் ஆளும் கட்சிக்கு வாக்களிப்பதால் சமுர்த்தி உத்தியோகத்தர்களூடாக பல உதவிகள் வழங்கப்படுமென்றும் பிரசாரம் செய்யுமாறு அவர்களை வற்புறுத்தியுள்ளார்.

இவ்வாறு பிரசாரங்கள் செய்பவர்களுக்கெதிராக தேர்தல் சட்டவிதிமுறைகளுக்கமைய நடவடிக்கை எடுத்து இவ்வாறான பிரசாரங்கள் மேலும் தொடராது நடைபெறாதிருப்பதை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (ம-250 -266)

# மாணவர் விடுதிக்கு பாதுகாப்பு

களனி பல்கலைக்கழக மாணவர் விடுதியின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாணவர் விடுதிக்குள் நேற்று அதிகாலைநுழைந்த குழுவொன்று தாக்குதல் நடத்தியதை அடுத்து பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நாசகார செயற்பாடுகளே இந்தத் தாக்குதலுக்கு காரணம் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர் விடுதியில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கும் பிரதேசவாசிகளுக்குமிடையே தொடர்பு இல்லை என பொலிஸார் கூறியுள்ளனர். தாக்குதல் நடத்திய குழுவைச் சேர்ந்த இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

# தொழில்நுட்ப பாடநெறி இன்று முதல் ஆரம்பம்

கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள தொழில்நுட்ப பாடநெறியைக் கற்பிக்கும் நடவடிக்கை, நாடளாவிய ரீதியிலுள்ள 250 பாடசாலைகளில் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

14 ஆயிரம் மாணவர்கள் இந்த பாடநெறியைக் கற்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக அமைச்சின் செயலாளர் அனுர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்ப பாடநெறியைக் கற்கும் மாணவர்களின் கல்வி நடவடிக்கை நிறைவு பெறும் சந்தர்ப்பத்தில், அவர்கள் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளக்கூடிய சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக செயலாளர் கூறினார். இந்தத் தொழில்நுட்ப பாடத்தைக் கற்பிப்பதற்கான பயிற்சிகளும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி நிலையங்களின் ஆசிரியர்களும் இதற்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

2016 ஆம் ஆண்டளவில் தொழில்நுட்ப கல்வியை கற்று, உயர்தரத்தில் சித்தியடையும் மாணவர்களுக்கு மேலதிக கல்வியைத் தொடருவதற்கு பல்கலைக்கழகங்களில் புதிய பாடத்திட்டங்களை உள்ளடக்கிய பீடங்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# உசுப்பேற்றல் பேச்சுக்கள் குறித்து மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாகாண சபை குறித்து நாம் கூறிய போது துரோகிகள் என்று எம்மைக் கொல்ல முயற்சித்தனர். ஆனால் இன்று அதை ஏற்றுக் கொண்டு அதனைப் பெற போட்டியிடுகின்றனர் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி கோவில் அருகாமையில் அண்மையில் இடம்பெற்ற ஐ.ம.சு.முன்னணியின் சார்பில் ஈ.பி.டி.பியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை குறித்து கடந்த 25 வருடங்களாக நாம் கூறி வந்த விடயமே இன்று சபைக்கு வந்துள்ளது. நாம் அப்போது மாகாண சபை குறித்து கூறிய போது எம்மை துரோகிகள் என்று வசைபாடியதோடு எம்மீது கொலை முயற்சிகளையும் மேற்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று அதை ஏற்றுக் கொண்டு அதற்காகப் போட்டி போடுகின்றனர்.

இந் நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் எமது மக்கள் சரியானவர்களைத் தெரிவு செய்யும் பட்சத்தில் அவர்களது வாழ்வாதாரத்தை மென்மேலும் மேம்படுத்தும் அதே வேளை அரசியல் உள்ளிட்ட அனைத்துரிமைகளையும் நிச்சயம் நாம் வென்றெடுக்க முடியும்.

மாகாண சபை என்பது எமது மக்களுக்கான சர்வரோக நிவாரணி என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அத்துடன் எமது மக்களுடைய எதிர்காலத்திற்காக என்னென்ன தேவைகள் இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் இனம்கண்டு அவற்றுக்கேற்ப தீர்வுகளைக் காண்பதிலும் நிச்சயமாக நாம் வெற்றி பெறுவோம்.

இந் நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் பிரசார கூட்டங்களில் மக்களை உசுப்பேற்றும் வகையிலும், நடைமுறைக்கு சாத்தியமில்லாத வகையிலும் பொய்யான பரப்புரைகளை அவர்கள் பரப்பி வருகின்றனர்.

இது விடயத்தில் எமது மக்கள் தெளிவாக இருக்க வேண்டுமென்றும் சரியானவர்களைத் தெரிவு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். இந்தக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின்(உதயன்), வேட்பாளர்களான சின்னத்துரை தவராசா, கந்தசாமி கமலேந்திரன், கோடீஸ்வரன் றுசாங்கன், ஈ.பி.டி.பி யின் சர்வதேச முக்கியஸ்தர் விந்தன், யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.(அ-6)

## த.தே.கூட்டமைப்பு பிரசாரக் கூட்டம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்டத்துக்கான வடமாகாண சபைத்தேர்தல் பிரசாரக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 5 மணிக்கு புதுக்குடியிருப்பு அம்மன் கோயில் முன்றலில் நடைபெறும் இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோதராதலிங்கம் தலைமை தாங்குவார். (அ-5-7)

✦ ✦ ✦ ✦ ✦

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்வடமாகாண சபை தேர்தல் பரப்புரைக்கூட்டமும் வேட்பாளர் அறிமுக விழாவும் இன்று மாலை 5 மணிக்கு மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கட்சியின் பொதுச் செயலாளர் மாவை. சேனாதிராஜா, முதன்மை வேட்பாளர் சி.வீ.விக்னேஸ்வரன் பிரதேச சபைத் தவிசாளர் ஜெபநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-9-23)

## 2014 இல் ஜனாதிபதி தேர்தல் நடவாது

அடுத்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறாது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகள் அடுத்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு கோரி வருகின்ற போதிலும் ஜனாதிபதி தேர்தலை நடத்தும் உத்தேசம் அரசாங்கத்துக்கு கிடையாது என சுட்டிக்காட்டியுள்ளது. எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி கோரி வருகின்றது. எனினும் 2015 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு பின்னரே தேர்தல் நடத்தப்படும் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். அதற்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் இல்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)









# சிறுவர் அரங்கம்

578

## எத்தனுக்கு எத்தன்!



பொன்னியூர் என்ற ஊரில் ஜனா, சுருதி என்ற இரு நண்பர்கள் இருந்தனர். அவர்கள் சிறு பிராயத்திலிருந்தே இணைபிரியாத நண்பர்கள். ஜனா திறமையாகச் சம்பாதித்துக் கொண்டு வருவான். சுருதி அதை வாங்கி நிம்மதியாகச் சாப்பிடுவான்.

உள்ளூரில் பஞ்சம் ஏற்பட்டது. கட்டுப்படியாகவில்லை. ஆதலால் வெளியூர் சென்று வியாபாரம் செய்து பிழைக்க இருவரும் முடிவு செய்தனர். இருவரும் குதிரையில் ஏறிக்கொண்டு பல ஊர்களையும் கடந்து ஏமலூர் என்ற ஊரை அடைந்தனர். ஊர் எல்லையில் உள்ள சத்திரம் ஒன்றில் தங்கினார். ஜனா சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டான்.

"சுருதி நான் இங்கே ஓய்வெடுக்கிறேன். நீ ஊருக்குள் சென்று வியாபாரம் செய்துவிட்டுவா!" என்று கூறி நண்பனை அனுப்பிவைத்தான். சுருதி மிகவும் வெகுளி. யார் எதைச் சொன்னாலும் நம்பி ஏமாந்து விடுவான். இக்கட்டில் மாட்டிக் கொண்டு விழிப்பான்.. இருந்தாலும் அவனிடம் தான் காசு இருந்தது.

ஆயிரம் பொற்காசுகளைக் குதிரையின் சேணத்தில் மறைத்துக் கொண்டு குதிரையில் ஏறி நகரைநோக்கிச் சென்றான். ஊருக்குள் சென்றதும் வீதியில் எதிரே ஒருவன் வந்தான். "இந்தக் குதிரை விலைக்குக் கிடைக்குமா?" என்று கேட்டான். "விலைக்குத் தரத்தயார். விலை மிக அதிகம். உன்னால் கொடுக்க முடியுமா? நீ என்ன தொழில் செய்கிறாய்?" என்று வினாவினான் சுருதி.

"என் பெயர் வில்லன். ஆடுகளை வெட்டி இறைச்சிக்கு விற்கும் கசாப்புக்கடை நடத்துகிறேன். விலையைக் கூறு?" என்றான் வில்லன். "இதன் விலை 500 பொற்காசுகள். உயர்தரமான அரேபியக் குதிரைகளை 200 பொற்காசுகளுக்கு கிடைக்கின்றன. உன் குதிரை பெரிய அதிசயக் குதிரையா? சரிபரவாயில்லை. இதோ நீ கேட்ட 500 பொற்காசுகள். குதிரையைக் கொடு" என்றான். 500 பொற்காசுகளை எண்ணிக்கொடுத்தான். பொற்காசுகளை பெற்றுக்கொள்வதற்காக சுருதி குதிரையை விட்டு இறங்கினான். பணத்தை எண்ணிப்பார்த்துக் கொண்டான். பிறகு குதிரையின் சேணத்தில் தான் வைத்திருந்த பணப்பையை எடுக்கச் சென்றான். "இந்தக் குதிரையை பணம் கொடுத்து வாங்கிவிட்டேன். இப்போது குதிரை எனக்குச் சொந்தம்." குதிரையோடு உள்ள பொருட்கள் யாவும் எனக்கே சொந்தம் என்று கூறிவிட்டு குதிரை மேல் ஏறிச்சென்றுவிட்டான்.

ஆயிரம் பொற்காசுகளை இழந்த சுருதி மிகுந்த ஏமாற்றத்துடன் சத்திரத்திற்கு வந்து சேர்ந்தான். நடந்தவற்றை நண்பனிடம் கூறினான். அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. அவனுடைய சோகக்கதையைக் கேட்ட ஜனா ஏளனமாகச் சிரித்தான்."இந்த ஊரினர் பயங்கர எத்தர்களாக இருக்கக்கூடும். இருக்கட்டும். உன்னிடம் குதிரையை வாங்கியவனின் பெயர் என்ன?" என்று கேட்டான் ஜனா.

"கசாப்புக்கடை வில்லன்" என்றான். உடனே நண்பனிடம் 25 பொற்காசுகளை வாங்கிக் கொண்டு வில்லனின் கசாப்புக் கடை முன்பாக போய் நின்றான். கடையில் நான்கு ஐந்து ஆட்டுத்தலைகள் தொங்கிக் கொண்டிருந்தன. கடைத்திண்டில் வில்லனின் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தன.


"ஒரு தலையின் விலை என்ன" என்று கேட்டான். "ஒருதலை ஒரு பொற்காசு" "எத்தனை தலைகள் வேண்டுமானாலும் கிடைக்குமா?" "ஆக தாராளமாகக் கிடைக்கும்." "இதோ இருபத்தைந்து பொற்காசுகள்." "இருபத்தைந்து தலைகள் கொடு!" "இப்போது இங்கே இருக்கும் தலைகளை எடுத்துப்போ. மீதியை நீ இருக்கும் இடத்தைச் சொல். அங்கே அனுப்பி வைக்கிறேன்." "அதெல்லாம் முடியாது. இங்கு தொங்கும் தலைகளுடன் கடையில் உள்ள உன் குழந்தைகளின் தலைகளையும் வெட்டிக் கொடுக்க வேண்டும். தலைகள் என்றுதான் பேசினோம். ஆட்டுத் தலைகள் என்று கூறவே இல்லை. எனக்கு குழந்தைகளின் தலையையும் கொடுக்கு வேண்டும்" என்றான்.

கசாப்புக்கடைக்காரன் அதிர்ச்சியில் நடுங்கினான். இவன் நம்மை விட கில்லாடியாக இருக்கிறானே. எக்கச்சக்கமாக வாக்குக் கொடுத்து வசமாக மாட்டிக் கொண்டோமே என்று மிகவும் பதறிக் கொண்டான். "ஐயா! இது முட்டாள்த்தனமாக வாக்குக் கொடுத்துவிட்டேன். மன்னித்துள்கொள்" என்று கெஞ்சினான். "சேச்சே... நீ கூறுவது எதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. முதலில் தலையைக் கொண்டுவா என்று கடுமையாகாகக் கூறினான் ஜனா. அப்போது தான் தான் காலையில் குதிரையை ஏமாற்றி வாங்கியது நினைவிற்கு வந்தது. ஏமாந்தவனின் நண்பன் இவன் என்பதைபுரிந்து கொண்டான். இவனிடம் தனது சாமர்த்தியம் பலிக்காது என்பதை புரிந்து கொண்டான். "ஐயா என்னை மன்னித்து விடுங்கள்.

வெளியூர்க்காரன் தானே என்று நினைத்து குதிரைக்காரனான உமது நண்பனை ஏமாற்றி விட்டேன். குதிரையையும் சேணத்தில் இருந்த ஆயிரம் பொற்காசுகளையும் தந்து விடுகிறேன். என்னை இத்துடன் விட்டுவிடுங்கள்" என்று மன்றாடினான். சரியெனச் சம்மதித்து குதிரை மற்றும் பணப்பையுடன் ஜனா சத்திரத்திற்கு திரும்பினான். நண்பனின் ஆற்றலை எண்ணிவியந்தான். தானும் ஜனாவைப் போல புத்திசாலியாக மாற தீர்மானித்தான் சுருதி.

### பஞ்சதந்திரக் கதைகள்

## குயில்டாக்டர்!



கற்பூரவள்ளி என்ற காட்டில் ஆந்தைக் குடும்பம் ஒன்று வாழ்ந்து வந்தது. அந்த ஆந்தைக்கு இரண்டு ஆந்தைக் குஞ்சுகள் இருந்தன. தன் குஞ்சுகளைப் பேணிப் பராமரித்து வந்தது. குஞ்சுகள் வளரவளரத் தன் அம்மாவிடம் பல கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தன. ஒருநாள் "அம்மா எல்லோரும் பகலில்தான் சுறுசுறுப்பாக உலாவிக்கொண்டிருக்கின்றனர். நாம் மட்டும் பகலில் தூங்கிவிட்டு இரவில் இரைதேடுகிறோம். நாம் சென்று இரைதேடும் வேளையில் ஊரே உறங்கிக் கொண்டிருக்கிறது. இது ஏன்" என்றது குஞ்சு.

"நமக்கு பகலில் கண் தெரியாது. இரவில் தான் கண் தெரியும். அதனால் தான் நாம் பகலெல்லாம் தூங்கிவிட்டு இரவில் சென்று இரைதேடுகிறோம்" என்றது தாய் ஆந்தை. "ஏனம்மா கடவுள் நம்மை மட்டும் இப்படிப் படைத்து விட்டார்?" என்று கேட்டது இன்னொரு ஆந்தைக்குஞ்சு. "கடவுள் நம்மை எல்லாம் ஒரே மாதிரித்தான் படைத்தார். முன்னொரு காலத்தில் நம்முடைய முன்னோர்களில் ஒருவர் செய்த தவறைத் தான் நாம் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம்" என்றது தாய் ஆந்தை.

"அப்படி என்ன தவறு செய்தார்" என்று கேட்டது குஞ்சு. "ஒரு முறை நம்முன்னோர் ஒருவர் காகம் ஒன்றுடன் மிகவும் நட்பாக இருந்தார். ஒரு நாள் அந்தக் காகத்திற்கு உடல்நிலை மிகவும் மோசமாக இருந்தது. எனவே அதை அழைத்துக்கொண்டு காட்டில் டாக்டராக இருந்த குயில் டாக்டரிடம் சென்றனர். குயில் டாக்டரோ நன்றாக வைத்தியம் பார்த்து காக்காவை குணமாக்கி விட்டது.

அதன் பிறகு டாக்டருக்கு காசுகொடுக்கணும் இல்லையா. ஆனால், இவர்கள் இருவரும் கொடுக்கவில்லை. எனவே குயில் டாக்டர் எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுங்கள் என்று கேட்டது. இவர்கள் இருவரும் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்லிவிட்டுச் சென்றனர். அதன் பிறகு இவர்கள் இருவரையும் பார்க்கும் பொழுதெல்லாம் கேட்க ஆரம்பித்துவிட்டது குயில்டாக்டர்.

ஏதுடா தொல்லையாப்போச்சே என்று நினைத்த நம் முன்னோர் பகலில் தலை காட்டுவதே இல்லை. இரவில் மட்டுமே வெளியே வருவதும் இரையைப் பிடித்துத் தின்பதுமாக இருந்தது. இப்படியே இருந்ததால் இருவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை குயில் டாக்டரால். அதனால் ஆத்திரமடைந்த குயில் டாக்டர் காக்காவை பிடித்து நன்கு திட்டி இருக்கிறது.

கோபம்கொண்ட குயில் டாக்டர் இனிமேல் எங்கள் இனத்தார் இடும் முட்டைகளை எல்லாம் உன் இனத்தார் தான் காவல் காக்க வேண்டும் என்று சொல்லிவிட்டுச் சென்றது. அன்றிலிருந்து குயில் இனத்தார் அனைவரும் காக்கையின் கூட்டில்தான் தங்கள் முட்டைகளை இட்டுவிட்டுச் சென்று விடுகின்றனர். அதில் குயிலின் முட்டை என்பது தெரியாமலேயே காக்கை இனம் அடைகாத்து வருகின்றது. நம்முடைய இனத்தார் பகலில் தூங்கித்தூங்கியே கண்தெரியாமல் போய்விட்டது" தாய் ஆந்தை.

"அம்மா பிறரை ஏமாற்றுவதால் ஏற்படும் கஷ்டம் காலம்காலமாக பலரைப் பாதிப்பதை புரிந்து கொண்டோம். இனிமேல் நாங்கள் இப்படிப் பட்ட காரியத்தை ஒருகாலமும் செய்ய மாட்டோம்" என்றனர் குஞ்சுகள். செல்லமாக தன் குஞ்சுகளை அணைத்து முத்தமிட்டது தாய் ஆந்தை.

# அன்னதானத்தின் பெருமை



ஆன்மீகம் 117

ஒருநாள் காலை நேரம். அன்னதானத்திற்கான அரிசி தீர்ந்துவிட்டிருந்தது. ஆச்சிரமத்திலும் யாரிடமும் பணமும் இல்லை. வேறு யாரிடம் கேட்பது. இறுதியில் சித்தர் பெருமானிடமே சரணடைந்தேன். சற்று நேரம் மௌனமாக இருந்தவர் அரிசி வாங்க பணம் வேணும் அவ்வளவுதானே? என்றவர் சிவமூலிகை சிலும்பியை எடுத்து நிரப்பினார். அதைப் பற்ற வைத்துப் புகைத்தார். இதைக் கண்டு ஒன்றும் புரியாமல் நான் திகைத்தேன். என்ன அப்படி பார்க்கிறீங்க. இந்த புகையை ஊதினால் பணத்தோடு ஆள் இப்படி தேடி வருவான் என்று கூறி வெள்ளை அம்பாஸிடர் கார் 757 நம்பர் வரும் அதில் பணத்தோடு வருவான் என்று கூறி குழந்தையைப்போல குலுங்கி குலுங்கி சிரித்தார்.

அவருடைய இலட்சியமான அன்னதானத்திற்கு அரிசியில்லை என்று கேட்டால் இப்படி விளையாடுகிறாரே! என்று வருத்தமாக இருந்தது. இதைக் கண்ட சித்தர் கவலைப்படாதே ராஜா உன் எண்ணப்படி அன்னதானம் நடக்கும் என்றார். இதைக் கேட்டதும் நான் ஆச்சிரமத்திலிருந்து வெளியே வந்தேன். மனம் தனிமையை நாடியது. அருகிலிருந்த ஆலமரத்தின் அடியில் சென்று அமர்ந்தேன். அருமையான காற்று அதைக் கண்களை மூடி அனுபவித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது ஏதோ சத்தம் கேட்டு கண்களைத் திறந்தேன். ஆச்சிரமத்தை நோக்கி ஒருகார் வந்து கொண்டிருந்தது. வந்து நின்ற காரிலிருந்து சிலர் இறங்கி ஆச்சிரமத்திற்குள் நுழைந்தனர். நானும் ஆச்சிரமத்திற்குள் நுழைந்தேன்.

அவர்களில் ஒருவருக்கு உடலில் ஏதோ நோய் சிகிச்சைக்காக வந்திருப்பதை அறிந்து வியந்துபோனேன். சித்தரிடம் மருந்து வாங்கிக்கொண்டவர்கள் அவர்களாகவே பணத்தை சித்தர் முன் நீட்ட என்னைப் பார்த்தார். குறிப்பறிந்து அந்த பணத்தை நான் வாங்கிக் கொண்டேன். வந்தவர்கள் விடை பெற்றார்கள். சித்தர்பெருமானை மனதில் வணங்கிக் கொண்டு நான் அரிசி வாங்கச்சென்று கொண்டிருந்தேன். சித்தர் சொன்னவாறு ஆள் வந்தது. பணம் தந்தது. எல்லாம் நடந்து முடிந்துவிட்டன.



சித்தர் ஆச்சிரமத்தில் அன்னதானம் அளித்தல்

ஆஹா! நான் எவ்வளவு பெரிய பாக்கியசாலி- இவர் அருகிலிருக்க நான் எத்தனை ஜென்மங்களில் தவம் இருந்தேனோ என்று மனம் உணர்ச்சி வசப்பட்டது. கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் கன்னத்தில் பாய்ந்தன. இதைத் தான் ஆனந்தக் கண்ணீர் என்று சொல்கிறார்களோ. அன்று அன்னதானம் ஆனந்தமாக நடந்தது. நிம்மதியாய் தனிமையில் சென்று அமர்ந்தேன். உள்ளம் தெளிந்த ஓடையாய் ஓடிக்கொண்டிருந்தது.


என் நண்பர்கள் என்னைக் கவலை இல்லாத விளையாட்டு பிள்ளை என்று கேலி செய்வார்களே! அப்போது இல்லாத இந்த மன அமைதி ஆனந்தம் எல்லாம் இப்போது எப்படி கிடைத்தது. மலரடி சேர்ந்தார்களால் மனக்கவலை மாற்றலரிது என்பது எவ்வளவு உண்மை என்பதை உணர்ந்தேன்.

எனக்கு என் குரு கூறிய விவரத்திலிருந்து அறிந்தது. அன்னதானம் ஏன் செய்யவேண்டும் தெரியுமா? நம்மிடத்தில் தருமம் செய்வதால் கண்டிப்பாய் நம்மை பார்க்க வரும் சித்தர்கள், ஞானி, ரிஷிகளும் கூட்டத்தோடு கூட்டமாய் போடும் சாப்பாடு 1 மூட்டை, 10 மூட்டையாய் வளர்ந்து விடும். அதுமட்டுமல்ல அன்று தருமத்தில் பங்கேற்றுக் கொண்ட புண்ணிய ஆத்மாக்கள் மகான்கள் சாப்பிட்ட காரணத்தால் பத்து ஆயிரம் பேர்கள் வடை பாயாசத்துடன் சாப்பிட்ட பலாபலன் கிடைக்கிறது.

இதேபோல் பத்துபேர்கள் ரிஷி, சித்தர், மகான்கள் சாப்பிட்டுவிட்டால் 1 லட்சம் பேர்கள் சாப்பிட்ட பலாபலன், தருமம் செய்யும் புண்ணியவான்களுக்கு போய்ச்சேரும், பூலோகத்தில் பிறவி எடுத்த பெரும் பயன்முடிகிறது. (தொடரும்)

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

# மழை நின்ற பின்பும் தூறல் தொடர்கிறது



…இது அப்படியில்லை. தமிழர்கள் மீதான தாக்குதலை நிறுத்தவே சாகும்வரை உண்ணாவிரதம் இருந்ததாக இவர் சொல்கிறார். அந்த உண்ணாவிரதத்தை நிறுத்துவதற்காக, தாக்குதல் நின்றுவிட்டதாய்ப் பொய்சொல்கிறது மத்திய அரசு. சிதம்பரத்தின் பொய்யை நம்பி, உண்ணாவிரதத்தையும் நான்கரைகோடி ஈழஉறவுகளையும் கைவிடுகிறார் கருணாநிதி. இனப்படுகொலை நடந்த அந்தக்களத்துக்குள் அன்புச்சகோதரி கனிமொழி சிக்கிக்கொண்டிருந்தார் என்று வையுங்கள்… சிதம்பரம் தெரிவித்த தகவலை உறுதிசெய்யாமல், தாக்குதல் நிறுத்தப்பட்டு விட்டதை ஊர்ஜிதம் செய்யாமல், உண்ணாவிரதத்தைக் கைவிட்டிருப்பார் கருணாநிதி? மழைவிட்டபிறகும் தூவானம் தொடர்கிறது என்கிற வசனத்தைப் பேசியிருப்பாரா?

இவருடைய கள்ளத்தனத்துக்கோ ஏமாளித்தனத்துக்கோ – எதுவோ ஒன்றுக்கு எங்கள் ஒன்றரை லட்சம் உறவுகள் பலியானபிறகு என்னை ஏமாற்றிவிட்டார்கள்- என்ற பொறுப்பான பதவியிலிருந்த இவர் புலம்புவது என்ன நியாயம்?

ஏமாந்துவிட்டேன், ஏமாந்துவிட்டேன் - என்று தன்னிரக்கத்தோடு இவர் உருகுவது உண்மையா? இவரை ஏமாந்த சோணகிரியாக்கிய சோனியாவிடம் மகளுக்கு வாக்கு கேட்டு மன்றாடியது உண்மையா? எது உண்மை என்பது முத்தமிழறிஞருக்கே வெளிச்சம்.

கனவினும் இன்னாது மன்னோ வினை வேறு சொல்வேறு பட்டார் தொடர்பு என்கிற வள்ளுவத்தை அறியாமலா, இலங்கை செய்த இனப்படுகொலைக்குத் துணைபோன கூட்டுக் குற்றவாளிகளிடம், தனக்குப் பொய்யான தகலைக் கொடுத்துத் தலை குனிய வைத்தவர்களிடம் மண்டியிட்டு, பெற்ற மகளுக்கு வாக்குக் கேட்டார் கருணாநிதி? கழகத்தின் சார்பில் வேறு வேட்பாளர் நின்றிருந்தால் இப்படி மானம் விற்று பிழைப்பு நடத்தத் துணிந்திருக்குமா தி.மு.க?

கருணாநிதியின் குடும்ப அரசியல்தான் ஒன்றைரை லட்சம் பேரைக் கொன்றுவிட்டது - என்பதை உணர்ந்தேயிருக்கிற தி.மு.க தலைவர்களும் தொண்டர்களும் உள்ளுக்குள் எப்படி பொருமுகிறார்கள் என்பதை அவர் புரிந்துகொள்ளாமலேயே இருந்தால் எப்படி?

தி.மு.க வின் பலமாக அவர் இருந்த காலம் போயே போச்சே! இன்று தி.மு.கவின் ஆகப் பெரிய பலவீனம் அவர், இந்தப் பலவீனம்தான் காங்கிரஸின் பலம். இந்தத் தைரியத்தில்தான் இலங்கை என்கிற சலங்கையைக் கட்டிக் கொண்டு நடனமாடுகிறது சோனியா காங்கிரஸ்.

கருணாநிதி என்கிற பாசப்பெட்டகத்தை முற்றும் முழுதாகப் புரிந்துகொண்டிருக்கிறது காங்கிரஸ். அதனால்தான், இனப்படுகொலை என்று சொல்லலாமா வேண்டாமா என்று தடுமாறுகிற கோழை நிலைக்கு அவரைத் தள்ளிவிட்டு, தமிழர் பூமியான இலங்கையைக் கைப்பற்ற வேண்டும், தமிழீழக் கனவை நனவாக்க வேண்டும் என்று காமடி நாச்சியை வைத்து வீரம் பேசுகிறது அக்பர் ரோடு நாச்சியப்பன் கோமாளியாவது அவரது விருப்பம். ஆனால், நம்மைக் கோமாளியாக்கப் பார்க்கிறாரே, அதை நாம் அனுமதிக்க முடியாது. தமிழ் ஈழ ஆதரவாளர் அமைப்பு- என்கிற பெயரைக் கூடப் பயன்படுத்தக் கூடாது என்று வாழும் வள்ளுவரையே மிரட்டியவர்கள் இவர்கள். இவர்களா தமிழீழக் கனவு என்று திடீரென்று சவுண்ட் கொடுக்கிறார்கள்....அதிர்ந்து போயிருக்கேன் நான்.

இலங்கை சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் குழுவில் இடம்பெற்றிருந்தவர்களில் நாச்சியும் ரங்கராஜனும் தான் இரும்புக்கை மாயாவி வேலையெல்லாம் செய்தார்கள். பாதுகாப்புப் படையினருக்கு டிமிக்கி கொடுத்து விட்டு , ஈழத்தமிழர்களை ரகசியமாகச் சந்தித்தார்கள். அவர்களுக்கு ஈழமெல்லாம் தேவையில்லை, சோறும் வேலையும் தான் தேவை என்பதைக் கண்டுபிடித்தார்கள்.

அண்மையில் டெல்லியில் இலங்கைப் பிரச்சினை தொடர்பாக நாச்சி நடத்திய மாநாடு கூட உப்புக்கு உதவாத 13 பற்றித்தான் பேசியது. இப்போது திடுதிப்பென்று களத்தில் இறங்கி, தமிழர்களுக்குச் சொந்தமான பூமி இலங் கை, தமிழீழக் கனவு நனவாக வேண்டும் என்று நாச்சி வீரவசனம் பேசுவதற்குப் பின் ஒரு மிகப் பெரிய மோசடி ஒளிந்துகொண்டிருக்கிறது.

ஈழவிடுதலையை மூர்க்கமாக எதிர்க்கும் இலங்கையில் முன்னணியில் இருப்பவர்கள் நாச்சியப்பன், ஈழம் கிடைத்து இலங்கை உடைந்துவிட்டால் இவர்களெல்லாம் வடக்கிலிருந்து உயிர்நீர்த்துவிடுவார்களோ- என்று கூட நான் அஞ்சுவதுண்டு. அப்படிப்பட்ட ஒருவர், தமிழ் ஈழம் என்று முழங்குவதைப் பார்க்கும்போது அழகாக இருக்கிறாய், பயமாக இருக்கிறது என்பதைப்போல் பயப்படுகிறேன் நான். கண்ணனுக்கு பாலூட்ட தனம் திறக்கும் பூதகிகளைப்பார்த்து அஞ்சாதிருக்க முடியுமா நாம்!

பிரபாகரன் என்கிற உன்னதமான விடுதலைப் போர்வீரனே, ஒட்டுமொத்த இலங்கையும் எமக்கென்று சொன்னதில்லை. வந்தேறிய நீ தென்னிலங்கையிலும், விரட்டப்பட்ட நாங்கள் தழிழரின் தாய்மண்ணிலும் இருந்து கொள்கிறோம்… உன்னை நீயும் எங்களை நாங்களும் ஆண்டு கொள்வோம் என்கிற செல்வாவின் கருத்தைத்தான் முன்னெடுத்தார் பிரபாகரன். ஒட்டுமொத்த இலங்கையையும் கைப்பற்றுவோம்- என்று நாச்சி மாதிரி திமிருடன் பேசவில்லை பிரபா.

தனது அறியாமையால் இலங்கைப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிய நாச்சியின் கதாநாயகன் ராஜீவ்காந்தியை, ஈழக் கோரிக்கையை நசுக்கத்தானே பயன்படுத்தியது ஜெயவர்தனே. அதை அறியாமல் தானே, தமிழீழ விடுதலைப் போரை நசுக்க முயன்றார் உங்கள் கதாநாயகன்! ஈழத்தின் மீது இப்போது என்ன திடீர் கரிசனம், சுதர்சனம்? ராஜீவ் கொள்கையைக் குழிதோண்டிப் புகைக்கப் போகிறீர்களா?

இப்படியெல்லாம் பேசுவதன் மூலம், கொழும்பு காமன்வெல்த் மாநாட்டுக்கு எழுந்துள்ளகடும் எதிர்ப்பை திசைதிருப்பப் பார்க்கிறீர்களா? இலங்கையைத் தோலுரிக்க இருக்கும் நவநீதம் பிள்ளையின் அறிக்கை வருமுன் குட்டையைக் குழப்ப முயற்சிக்கிறீர்களா? ஏதோ ஒரு திட்டம் இல்லாமல் அக்பர் ரோட்டிலிருந்து களத்தில் இறக்க மாட்டார்கள் நாச்சியை!

நாச்சியப்பன் வகையறா நமக்கு கொம்பு சீவ நாம் அனுமதிக்கவே கூடாது. சுதர்சனத்துக்கும், அவரது எஜமானர்களுக்கும் ஈழத்தைக் கைப்பற்ற அல்ல, அதைப்பற்றியே பேசவே அருகதை கிடையாது. இவர்களது துரோகத்தால் கொல்லப்பட்ட 3 இலட்சம் தமிழர்களின் ஈரத்தால் சுத்திகரிக்கப்பட்டிருக்கும் அந்த மண்ணில் இவர்களது கால்விரல்கூட பட்டுவிடக்கூடாது. தந்தை செல்வாவும் பிரபாகரனும் வரையறுத்ததை மீறி தமிழீழம் பற்றித் தான்தோன்றித் தனமாக பேசாதீர்கள் என்று சுதர்சன நாச்சியப்பனை நாம் ஒவ்வொருவரும் எச்சரித்தாக வேண்டும்.

அதே சமயம், இலங்கையில் என்னைச் சந்தித்து முறையிட்டவர்களை அச்சுறுத்தாதே என்று எச்சரித்திருக்கும் நவநீதம்பிள்ளைக்கும், பயங்கரவாதி அல்ல பிரபாகரன்… மக்களுக்காகப் போராடிய மாவீரன் என்ற தெள்ளத் தெளிவாகப் பேசியிருக்கிற சிங்களத் தலைவர் விக்கரமபாகுவுக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதல்வர் வேட்பாளர் விக்னேஸ்வரனுக்கும் மறக்காமல் நன்றி சொல்ல வேண்டும்.

புகழேந்தி தங்கராஜ் (முற்றும்)

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013 யாழ் மாவட்டம்

## 1. கல்வி மேம்பாடு

யாழ்ப்பாணத்தின் முதுகெலும்பான கல்வி இன்று பல சவால்களை எதிர்கொண்டு வருகின்றது. அச்சவால்களை வெற்றிகொண்டு குடாநாட்டுக் கல்வித்தரத்தினை மேம்படுத்தும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

- கிராமப் பாடசாலைகளுக்கு அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்
- கல்விக்குத் தடையாகவுள்ள வளப்பற்றாக் குறைகளை நிவர்த்தி செய்தல்
- உயர் கல்விக்குத் தேவையான இலத்திரனியல் சாதனங்களை வழங்குதல்.
- மாணவர்களின் பல்துறை ஆற்றல்களையும் மனவெழுச்சியினையும் ஊக்கப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- உயர்கல்விக்கான புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொடுத்தல்.

## 2. இளைஞர் அபிவிருத்தி

நவயுகத்திற்கும் தொழிலுலகிற்கும் ஏற்புடையதாக குடாநாட்டின் இளைஞர்கள் தம்மை இயைபாக்கிக் கொள்வதற்கு வாய்ப்புக்கள் இன்று மிகக் குறைவாகவே உள்ளன. அத்தகைய வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- இளைஞர் திறன் விருத்திப் பட்டறைகளை கிராமங்கள் தோறும் நடாத்துதல்.
- உயர்கல்வி வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளாத இளைஞர்களுக்கு தொழிற் பயிற்சிகளை வழங்குதல்.
- தகவல் தொடர்பாடல், ஆங்கிலம் போன்ற திறன்சார் கல்வியினை தரமாகவும் பரவலாகவும் கிடைக்கச் செய்தல்.
- சர்வதேசத் தரத்திலான இளைஞர் திறன் விருத்தி மையமொன்றை குடாநாட்டில் நிறுவுதல்.



அங்கஜன் இராமநாதன்

MBA (International) B.Eng (Hons)



1

## 3. வேலைவாய்ப்புக்களை விரிவுபடுத்தல்

குடாநாட்டில் பல இளைஞர்கள் வேலைவாய்ப்புக்களை எதிர்நோக்கியுள்ளார்கள். அவர்களுக்குப் பொருத்தமான தொழில்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டு சுபீட்சமான வாழ்விற்கு வழியமைக்கப்படும். இவ்வேலைவாய்ப்புக்கள் பாரபட்சமின்றியும், பணங்கொடுத்து வேலைவாங்கும் கலாசாரத்திற்கு மாற்றாகவும், எவ்வித எதிர்பார்ப்புக்கள் இன்றியும், இதுவரை என்றால் வழங்கப்பட்டதைப் போலவே தொடர்ந்தும் வழங்கப்படும்.

- மாகாண சபையிலுள்ள வெற்றிடங்களுக்கு உடனடியாக நியமனங்களை வழங்கல்.
- மத்திய அரசின் கீழான திணைக்களங்கள் நிறுவனங்களின் வெற்றிடங்களில் மேது இளைஞர்களை நியமிக்க முயற்சித்தல்.
- தனியார்துறை வெற்றிடங்களில் மேது இளைஞர்களுக்கு வாய்ப்பு வழங்க தொடர்பாளராய்ச் செயற்படுதல்.

எங்களின் நேர்மை
உங்களின் நம்பிக்கை

முகப்புத்தகத்தில் தொடர...
www.facebook.com/angajan1

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் – 2013 யாழ் மாவட்டம்

## 4. விவசாய வேளாண்மை விருத்தி

விவசாயத் துறையில் ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்தவர்கள் நாம். இன்று இத்துறையில் நலிவடைந்துள்ளோம். மீண்டும் விவசாய வேளாண்மைத் துறைகளை விருத்தி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- விவசாய, வேளாண்துறை முயற்சியாளர்களுக்கு இலகு கடன்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- பொருத்தமான மானிய, நிவாரண உதவிகள் விரைவாகக் கிடைக்க உதவுதல்.
- சந்தை வாய்ப்புக்களை அதிகரிப்பதோடு இலகுவாக்குதல்.
- சந்தைகளில் செயற்கையாக ஏற்படுகின்ற விலைத் தளம்பல்களில் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல்.
- உள்ளூர் உற்பத்திகளுக்கு எக்காலத்திலும் முக்கியத்துவத்தினை வழங்க முயற்சித்தல்.
- காப்புறுதி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- இடைநிறுத்தப்பட்டுள்ள விவசாயிகளுக்கான ஓய்வூதியத்தினை மீளப் பெற்றுக் கொடுத்தல்.

## 5. சிறுவர் விருத்தி

எமது பிரதேசத்தின் எதிர்கால சந்ததியினரான சிறுவர்களைப் பாதுகாப்பதோடு அவர்களை ஆற்றலுள்ளவர்களாக வளர்த்தெடுக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு வருகின்றது.

- சிறுவர் விருத்தியில் அதீத அக்கறையுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.
- கிராமந்தோறும் சிறுவர் பூங்காக்களை நிறுவுதல்.
- துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாப்பதோடு துஷ்பிரயோகங்களுக்கு எதிரான சட்டங்களை வலுவாக்க நடவடிக்கை எடுத்தல்.
- சிறுவர் கண்காட்சி மையங்களை நிறுவுதல்

## 6. புனர்வாழ்வளித்தல்

தடுப்பு முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்விற்கு உதவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

- அரச, தனியார் துறைகளில் பொருத்தமான வேலை வாய்ப்புக்களைப் பெற்றுத் தருதல்.
- சுயதொழில்களை ஆரம்பிப்பதற்கான கடன் மற்றும் ஆதார உதவிகளை ஏற்பாடு செய்தல்.
- தேவைக்கு ஏற்ற தொழிற் பயிற்சி, ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- வாழ்வதற்கான நம்பிக்கையை உருவாக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

## 7. ஏனையவை

- குடாநாட்டிலுள்ள தொழிற்சாலைகளைப் புனரமைத்தல்.
- உள்ளூர் உற்பத்திகளை விருத்தி செய்தலும் சுய தொழில்களை ஊக்குவித்தலும்.
- கிராமம் தோறும் சந்தைகளைச் சீரமைத்தல், சனசமூக வளர்ச்சியில் பங்கெடுத்தல்.
- ஓய்வூதியர்களுக்கான பொழுதுபோக்கு மையங்களை அமைத்தல்.
- கிராமிய வைத்தியசாலைகளைத் தரமுயர்த்தல், வீதிகளைப் புனரமைத்தல்.
- எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் நடைமுறைச் சாத்தியமானதுமான நிரந்தரத் தீர்வொன்றிற்கு ஆதரவு அளித்தலும் அதனை விரைவுபடுத்த முயற்சித்தலும் இலங்கையின் பிறமாகாணங்களைப் போன்றும் அதற்கு மேலாகவும் விரைவான அபிவிருத்தியை வடக்கில் ஏற்படுத்தி எமது மக்களின் சுபீட்சமான எதிர்காலத்திற்கு உழைப்பதே எனது நோக்கு.




எங்களின் நேர்மை
உங்களின் நம்பிக்கை

முகப்புத்தகத்தில் தொடர...
www.facebook.com/angajan1

# காணாமற் போனவர்களின் உறவினர்கள் உளவியற் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்



காணாமற் போன பல ஆயிரக் கணக்கானவர்களின் உறவினர்கள் உளவியல் ரீதியான தாக்கத்திற்கு உட்பட்டுள்ள போதிலும், இவர்களின பிரச்சினைக்குத் தீர்வு காண சிறிலங்கா அரசாங்கம் இன்ன மும நடவடிக்கை எடுக்கவில்லை எனவும, காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இன்ன மும் பதிலளிக்கப்படவில்லை எனவும செயற்பாட்டாளர்களும் ஆய்வாளர் களும் தெரிவித்துள்ளனர்.

'காணாமற்போன தமது துணை வர்கள், பிள்ளைகள் அல்லது பெற் றோர்கள் போன்றவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்கின்ற அச்சம் காரணமாக இவர்களின் குடும்ப உறுப்பினர்களிடம் வேத னைப்படுகின்றனர். இதனால் இவர் கள் மனஅழுத்தத்திற்கு உட்படு கின்றனர்" என கொழும்பு பல் கலைக்கழகத்தின் மானுடவிய லாளரும் தேசிய ஆலோகருமான அனந்த கலாப்பற்றி தெரிவித்துள்ளார்.

"காணாமற் போன தமது உறவு கள் இறந்து விட்டார்களா அல்லது அவர்கள் இன்னமும் உயிருடன் உள்ளனரா என்பதை நிச்சயப்படுத திக் கொள்ளமுடியாத உறவுகள் உணர்வு ரீதியாகவும் சமூக ரீதியாக வும் பாதிக்கப்பட்டுள்ளனர்" என அனந்த கலாப்பற்றி மேலும் குறிப் பிட்டுள்ளார்.

காணாமற் போனவர்களின் உறவினர்களுக்கு சிறிலங்காவில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட சமூக உளவியல் ஆதரவுகளே வழங்கப் படுவதாக அனந்த கலாபற்றியும் ஏனைய வல்லுனர்களும்சுட்டிக்காட்டி யுள்ளனர். சிறிலங்கா அரசு மற்றும இலாபநோக்கற்ற நிறுவனங்கள் ஆகியன காணாமற்போனவர்களின் உறவினர்களுக்கு மிகவும் குறைந தளவு உதவிகளையே வழங்கு வதாக கலாப்பற்றி தெரிவித்துள்ளார்.

'சமூகஉளவியல் சார் சேவை வழங்குனர்கள் உளவியல் தாக்கத திற்குட்பட்ட மக்களுக்கு உதவி களை வழங்குவதற்கு அரசியல் சார் பிரச்சினைகள் தடையாக காணப்படுகின்றன" என கலாப் பற்றி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதாவது இந்தச் சேவை வழங் குனர்கள் காணாமற் போனவர் களின் உறவினர்களைச் சந்தித்து தேவையான உதவிகளை வழங்கு வதற்கு சிறிலங்கா அரசாங்கம் தடையாக உள்ளதாக அரச சார்பற்ற நிறுவனங்கள் சில முறையிட்டுள் ளன.

காணாமற் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கை கள் உள்ளடங்கலாக பல்வேறு மனித உரிமைச் செயற்பாடுகளில் ஈடுபடும் தனது நிறுவனத்தைப் போன்ற பல அரச சார்பற்ற நிறுவன ங்கள் மக்களை நேரடியாகச் சந் தித்துப் பணியாற்றுவதற்கான அனுமதியைத் தருவதற்கு சிறிலங்கா அரசாங்க அதிகாரிகளும் இராணு வத்தினரும் அண்மைக்காலம் வரை தயக்கம் காண்பித்ததாக யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டியங்கும் பெண்கள் மற்றும அபிவிருத்திக்கான மையத்தின் இயக்குனர் சறோஜா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். இவ்வாறு தாம் எவ்வித தடைகளையும்விதிக்கவில்லை என வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகள் பதிலளித் துள்ளனர்.

2011ல் பாதிக்கப்பட்ட மக்களைச் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு சில அரச சார்பற்ற நிறுவனங்களு க்கு அனுமதி வழங்கப்பட்ட போதும, காணாமற் போனவர்களின் உறவி னர்களிடம் நிறுவனங்கள் சென்ற போது அவர்களில் பெரும்பாலான வர்கள் தமது ஒத்துழைப்பைத் தருவதில் தயக்கம் காண்பித்த தாகவும் சிவச்சந்திரன் குறிப்பிட்டார்.

சிறிலங்கா அரசாங்கமானது காணாமற் போனவர்களின் பிரச்சி னையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கத் தயங்குவதானது நாட்டில் சமூக உளவியல் ஆதரவுத் துறை யானது மிகவும் பலவீனமடைந் துள்ளதையே காண்பிக்கின்றது என சிறிலங்காவில் செயற்படும் செயற் பாட்டாளர்கள் மற்றும் ஆய்வாளர் களுக்கான தேசிய அரச சார்பற்ற நிறுவனமான Rights Now Initiative நிறுவனத் தைச் சேர்ந்த செயற்பாட்டாளரான றுக்கி பெர்னா ண்டோ தெரிவித்துள்ளார.

"காணாமற் போனோர் தொடர பான பிரச்சினையை ஏற்றுக்கொண்டு ஆராயப்படுவதானது இவர்களின் உறவுகள் தாங்கி நிற்கும் வடுக் களைக் களைவதற்கு அடிப்படையா னது. சிறிலங்கா அரசாங்கமானது பாதிக்கப்பட்ட இந்த மக்களின் பிரச்சினையை அங்கீகரிப்பதில் தயக்கம்காண்பிப்பதானது இவர்களுக் கான நிதி உதவிகள் மற்றும் உளவள ஆலோசனைகளைப்பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புக் குறை கிறது. எடுத்துக்காட்டாக, இந்த விடயத்தில் சாதகமான அனுபவங் களைக் கொண்டுள்ள ஆசிய மற்றும இலத்தீன் அமெரிக்க நாடுகள் காணாமற் போனவர்கள் தொடர பில் உதவிகளை வழங்க முன்வரு கின்ற போதிலும் சிறிலங்கா அரசாங கம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்காததால் இந்த வாய்ப்புக்கள் இழக்கப்படுகின்றன" என றுக்கி பெர்னாண்டோ மேலும் சுட்டிக்காட் டியுள்ளார்.

மே 2009ன் முதல் வாரத்தில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 24 வயதான மகேஸ்வரி என்கின்ற பெண்ணின் சகோதரன் காணாமற் போனார். அதிலிருந்து இந்தப் பெண் காணாமற்போன தனது சகோதரனைத் தேடிக் கொணடிரு க்கிறார்.

"நாங்கள் இறுதிக்கட்ட யுத்தம் உக்கிரமடைந்திருந்த போது நந்திக கடல்நீரேரியைத் தாண்டி சிறில ங்கா அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் வருவதற்கான முயற்சியில் ஈடுபட்ட போது எனது சகோதரன் எம்மிடமிருந்து பிரிந்துவிட்டார். இதிலிருந்து இவர் தொடர்பான எந்தத் தகவலையும் நாம் பெற்றுக் கொள்ளவில்லை" என மகேஸ்வரி தெரிவித்தார். மகேஸ்வரி தனது சகோதரனுக்கு என்ன நடந்தது என்பதை அறியாது மிகவும் வேத னையில் வாழ்கிறார். இவரைப் பொறுத்தளவில் இவர் தனது சகோத ரனின் நினைவுகளிலிருந்து அகல முயற்சிக்கின்ற போதிலும் அது சாத்தியமற்றதாக இருப்பதாக கூறுகி றார்.

"இரத்த உரித்தானவர்களை இழந்து அவர்களுக்கு என்ன நடந திருக்குமோ என்பதை அறியமுடி யாத வாழ்கின்றவர்கள் மனஅழுத்த த்திற்கும் நம்பிக்கைக்கும் இடை யில், அதாவது அவர்கள் கிடைத்து விடுவார்கள் என்கின்ற நம்பிக்கைக் கும் அவர்கள் கிடைத்து விடவில லையே என்பதால் உண் டான மன வேதனைக்கும் இடையில் அகப்பட டுத் தவிக்கின்றனர்" என அனைத் துலக மன்னிப்புச் சபையின் அவுஸ் திரேலியாவுக்கான பேச்சாளர் மிங்க் யு தெரிவித்துள்ளார்.

சிறிலங்காவில் மூன்று பத்தாண டுகளுக்கும் மேலாகத் தொடரப்பட்ட யுத்தத்தின் போது பெருமளவான மக்கள் காணாமற் போயுள்ளனர். மக்கள் விடுதலை முன்னணியால் 1988 தொடக்கம் 1989 வரை கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்பட்ட துடன், தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும் சிறிலங்கா அரசாங்கப் படை களுக்கும் இடையில் பல பத்தாண் டுகளாக உள்நாட்டு யுத்தம் தொடர ப்பட்டது. இவற்றின் விளைவாக நாட்டில் பல்வேறு அழிவுகள் ஏற்பட் டன. இதில் காணாமற் போனவர களின் எண்ணிக்கை மிகவும் அதிகமானது. ஜே.வி.பி கிளர்ச்சி யின்போது 60,000 வரையான மக்கள காணாமற் போனதாக றுக்கி பெர் னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார்.

"1995ல், சிறிலங்கா அதிபர் செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது 30,000 வரையான காணாமற்போன முறை யீடுகள் பெறப்பட்டது" என பெர்னா ண்டோ குறிப்பிட்டார். சிறிலங்கா வின் வடக்கில் 2635 பேர் வரை காணாமற் போயுள்ளதாக 2011ல் சிறிலங்கா அரசாங்கத்தால் வெளி யிடப்பட்ட புள்ளிவிபரத்தில் தெரிவிக் கப்பட்டிருந்தது.

இந்த எண்ணிக்கையானது 2005 தொடக்கம் 2009 வரை யான காலப்பகுதியில் காணாமற் போனவர்கள் தொடர்பானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இக்காலப்பகுதியில் சிறிலங்காவின் வடக்கில் பணிபுரிந்த ஆய்வாளர் கள் மற்றும் மனிதாபிமானச் செயற் பாட்டாளர்கள் இந்த எண்ணிக்கை இன்னமும் அதிகமானது எனக் குறிப்பிடுகின்றனர்.

சிறிலங்காவில் 16,090 காணா மற்போனவர்கள் தொடர்பான வழக்குகளை அனைத்துலக செஞ்சிலு வைச் சங்கம் பதிவு செய்துள்ளதாக 2012ல் அறிவித்த போதிலும் இந்த வழக்குளில் பெரும்பாலனவை 1988-1989 ஜே.வி.பி கிளர்ச்சிகளில காணாமற் போனவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2012 நிலவரப்படி, அனைத்துலக செஞ்சிலு வைச் சங்கமானது காணாமற் போனவர்கள் தொடர்பில் 310 புதிய வழக்குகளைப் பதிவு செய்துள்ளது.

காணாமற் போன மற்றும் கடத் தப்பட்டவர்கள் தொடர்பான ஐ.நா செயற்பாட்டுக் குழுவானது சிறில ங்கா அரசாங்கத்திற்கு 12,473 காணாமற் போன வழக்குகளை அனுப்பியிருந்தது. அதாவது இந்தக் குழு 1980ல் ஆரம்பிக்கப்பட்டதிலி ருந்து பதிவு செய்யப்பட்ட வழககு களே இவையாகும். இவற்றுள் 5676 வழக்குகள் இன்னமும் நிலுவையிலேயே காணப்படுகின் றன. இவற்றுள் 6535 வழக்குகளு ககு சிறிலங்கா அரசாங்கம் பதிலளித் திருந்தது. இதில் 222 வழக்குகள் இரு தடவைகள் பதிவு செய்யப்பட்ட தாகவும் உறுதிப்படுத்தப்பட்டது. ஏனைய 40 வழக்குகளில் குறிப்பிட பட்டுள்ள காணாமற் போனவர்களு க்கு என்ன நடந்தது என்பதை வேறு தரப்புக்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

1980லிருந்து ஐ.நாவிடம் இந்த வழக்குகள் கையளிக்கப்படுவதாக வும், இந்தக் காலப்பகுதியிலிருந்து காணாமற் போனோர் தொடர்பில் முறைப்பாடு செய்யப்படுவதில் ஈராக் கிற்கு அடுத்ததாக இரண்டாவது நிலையில் சிறிலங்கா இருப்பதாக வும் அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது. வடக்கில் தொடரப்பட்ட யுத்தத்தில் 30,000 வரையானோர் காணாமற் போயிருப் பதாக செயற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய ஆய்வாளர்களின் தகவல களை அடிப்படையாகக் கொண்டு **Rights Now Initiative** நிறுவனம் மதிப்பிட்டுள்ளது.

காணாமற் போனவர்களின் குடும்பங்களுக்கு மட்டுமல்லாது, போரால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் உளவியல் சேவை கள் வழங்கப்பட வேண்டும். 2008 ஏப்ரல் 25ல், கொழும்பின் புறநகர்ப் பகுதியான பிலியந்தலவில் பேரூந் துக்காக காத்துக் கொண்டிருந்த பெண்ணொருவர் மக்களுடன் புறப்படத் தயாராக இருந்த பேரூந் தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பை நேரில் பார்த்தார். இந்தக் குண்டு வெடிப்பில் 24 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன், 40 பேர் வரை படுகாயமடைந்தனர்.

"நான் இந்தக் குண்டுவெடி ப்பை நேரில் பார்த்தேன். நான் தற்போது வேலைக்குச் செல்லும் போது சிலவேளைகளில் இந்தக் குண்டுவெடிப்பு நினைவுகள் என் னைச் சிலிர்க்க வைக்கும். குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்திலிரு ந்து பேரூந்தில் பயணிப்பதற்கு 2 கிலோமீற்றர் தூரம் வரை தற் போது நடந்து செல்ல வேண்டி யுள்ளது" என நயந்தி பெர்னா ண்டோ தெரிவித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் ஆணை யாளர் நவிபிள்ளை சிறிலங்காவுக கான தனது சுற்றுப் பயணத்தை மேற்கொள்வதற்கு முன்னர், சிறில ங்கா அதிபர் மகிந்த ராஜபக்ச, வடக்கு கிழக்கில் யுத்தத்தின் போது காணா மற் போன மக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக மூன்று உறுப்பினர்களைக்கொண்ட ஆணைக குழு ஒன்றை நியமித்திருந்தார். இந்த ஆணைக்குழுவானது ஆறு மாதத்திற்குள் காணாமற் போனோர் தொடர்பான விசாரணை அறிக் கையை சிறிலங்கா அதிபரிடம் கையளிக்க வேண்டும்.

சிறிலங்காவுக்கு வருகை தந்தி ருந்த நவி பிள்ளை, போரின் தாக் கத்தால் வடுக்களைச் சுமந்து வாழும மக்களைப் பார்த்தபோதுதான் மிகவும் வேதனையடைந்ததாக வும், இவர்களில் காணாமற் போன வர்களின் உறவினர்களும், போரின் போது கொல்லப்பட்டவர்களின் உற வினர்களும் அடங்குவதாகவும் போரிலிருந்து மீண்டெழுந்து தற போது உயிர்வாழும் மக்களும் உள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார். "இந்த மக்களின் காயங்கள் ஆறாது. வேதனைப்படும் இந்த மக்கள் மதிக்கப்படாது சிறிலங்காவில் மீளிணக்கப்பாடு ஒருபோதும் நடை பெறமாட்டாது" என பிள்ளை மேலும் தெரிவித்திருந்தார்.

2004ல், சிறிலங்காவில் 30,000 வரையான உயிர்கள் காவு கொள் ளப்பட்ட ஆழிப்பேரலையின் பின்னர் உளவியல் ரீதியாக மக்களை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்க மருத்துவர்கள் மற்றும் உளவியல் வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.

"பிரதான அரசாங்க வைத்திய சாலைகளில் பணியாற்றும் வைத்தி யர்கள் மற்றும் மூத்த பணியாளர் களுக்கு உளவியல் தாக்கத்திற்கு உட்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்குவது தொடர்பாக பயிற்றுவிக் கப்பட்டுள்ளது" என கொழும்பிலுள்ள, சிறிலங்காவின் முதன்மையான மருத்துவ, உடல் நலத் தேவைகளுக கான தேசிய நிறுவகத்தின் பிரதி இயக்குனரான விண்டியா குமாரப் பிள்ளை தெரிவித்துள்ளார்.

தேசிய ரீதியில், உளவியல் பாதிப்புக்கு உட்பட்ட நோயாளி களை வைத்தியசாலையில் தங்க வைத்துக் குணப்படுத்துவதற்கு ஒரேயொரு வைத்தியசாலை மட்டுமே உள்ள போதிலும் வெளிநோயாளர் களைப் பார்வையிடுவதற்கு 278 நிலையங்கள் காணப்படுவதாக வும், 25 மாவட்டங்களில் 20 மாவட்டங்களில் உளவியல் தாக்கத் திற்குட்பட்டவர்களுக்கு சிகிச்சைய ளிப்பதற்கான வசதிவாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

2005ல் தேசிய உளச் சுகா தாரக் கோட்பாடு வரையப்பட்டது. சிறிலங்காவில் உளவியல் மருத் துவர்கள் 60 பேர் பணியாற்றுவதாக வும் ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒருவர் பணியாற்றுவதாக வும் உலக சுகாதார நிறுவனம் தெரி வித்துள்ளது. சிறிலங்காவின் மொத்த சனத்தொகையில் இரண்டு சதவீத மானவர்கள் மிகப்பெரிய உளவியல் நோய்களுக்கு உட்பட்டுள்ளதாகவும், 10 சதவீதமானோர் மனஅழுத்தங்கள் மற்றும் மனக்கவலை போன்றவற் றுக்கு உட்பட்டுள்ளதாகவும் விண்டியா குமாரப்பிள்ளை மேலும் குறிப் பிட்டுள்ளார்.

"சிறிலங்காவில் காணாமற போனவர்களின் குடும்பத்தினருக்கு உடனடியாக அடிப்படைத் தேவைகள் வழங்கப்பட வேண்டும். இவர்கள் தமது அன்புக்குரியவர்களை இழந்து வேதனையில் வாழ்வதால் இவர்கள சிறப்புத் தேவைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மேலும் இவர்களுக்கு சட்டம் மற்றும் பொருளாதார ரீதியில உதவிகள் வழங்கப்பட வேண்டும" என அனைத்துலக செஞ்சிலுவைச சங்கத்தின் பாதுகாப்புப் பிரதிநிதி யான சுராப் புர்டுலி தெரிவித்துள்ளார.

"காணாமற் போனவர்களின் குடும்பத்தவர்களின் காத்திருப்புக்கள் தொடர்கின்றன. இந்தக் குடும்பங்கள சந்திக்கும் எல்லாப் பிரச்சினைகளும இவ்வாறான தொடர்ச்சியான காத்தி ருப்பால் மேலும் மோசமடைகின் றன. இந்தக் குடும்பங்களின் தேவை கள் கவனத்தில் எடுக்கப்படாவிட் டால் இவர்களின் பிரச்சினைகள் மேலும் தொடரும்" எனவும் சுராப் புர்டுலி சுட்டிக்காட்டியுள்ளார்.

**இணையம்**

# ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட நால்வர் கைது

(வவுனியா)

வவுனியாவில் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்ட கொழும்பைச் சேர்ந்த நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆலட் சந்தி பகுதியில் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களில் இருவர் கைதாகியுள்ளனர்.

அவர்களில் ஒருவர் 70 மில்லி கிராம் ஹெரோயினை விற்பனை செய்ததுடன் 370 மில்லிகிராம் ஹெரோயினை தன்னகத்தே வைத்திருந்ததாகவும் இவர் மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்தவர் என்பதோடு இவரிட மிருந்த முச்சக்கரவண்டியொன்று கைப்பற்றப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

மற்றைய கிராண்ட்பாசை சேர்ந்தவரிடம் 70 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா புகையிரத நிலையத்துக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப் புக்களில் மேலும் இருவர் கைதாகியுள்ளனர்.

70 மில்லிகிராம் ஹெரோயினை விற்பனை செய்ததோடு 2 கிராம் 160 மில்லி கிராம் ஹெரோயினை தன்னகத்தை வைத்தி ருந்த மாளிகாவத்தை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் 170 மில்லிகிராம் ஹெரோயினுடன் மிரானியாவீதி கொழும்பை சேர்ந்த ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் படவுள்ளனர். (அ-2)

# தெரிவத்தாட்சி அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளருக்கும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் விசேட சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோத சுவரொட்டிகள், பதாகைகள், கட்டவுட்கள் அனைத்தையும் எதிர்வரும் 16 ஆம் திகதிக்குள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் இதன் போது பணிப்புரை விடுத்துள்ளதாக தேர்தல் கள் செயலகத்தின் ஆலோசகர் பந்துல குல துங்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரமானதும் நீதியுமான தேர்தலை நடத்துவதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்இந்த விசேட சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இவ்விசேட சந்திப்பில் கலந்து கொண்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் தமது அதிகாரப் பிரிவிற்குள் இடம்பெறுகின்ற தேர்தல் நடவடிக்கைகள் குறித்தும் தெரிவத்தாட்சி அதிகாரிகள் தேர்தல்கள் ஆணையாளருக்கு எடுத் துக் கூறியுள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளில் நிலவுகின்ற பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கலந் துரையாடப்பட்டுள்ளது.

தேர்தலுக்கு முன்னரும் தேர்தலின் பின் னரும் வன்முறைகள் ஏற்படுவதைத் தவிர்ப் பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள் ளும் பொருட்டு, மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்க ப்பட்டுள்ளன. (அ-2)

# இவ்வருடத்தில் நான்காயிரம் காசநோயாளர்கள் பதிவு

(கொழும்பு)

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நான்காயிரத்திற்கும் அதிகமான காச நோயாளர்கள் பதிவாகியுள்ளனரென சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது. அதிகளவிலானவர்கள் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளதாக காச நோய் ஒழிப்பு தேசிய செயற் றிட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் சுதத் சமரவீர கூறியுள்ளார்.

இரண்டு வாரங்களுக்கு மேலாக அதிககாலம் காணப்படும் இருமல், காசநோய்க்கான அறிகுறியாகும். நாட்டில் 26 மாவட்டங்களில் தற்போது காசநோய் பரிசோதனை நிலையங் கள் அமைக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

காசநோயாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் பட்சத்தில் சளியின் மாதிரியை பரிசோதித்து கண்டறியலாம் எனவும் காசநோய் ஒழிப்பு தேசிய செயற்றிட்டத்தின் பிரதிப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

இதேவேளை காசநோய்க்கு உரிய சிகிச்சை இருப்பதாகவும் நோய் இருப்பது கண்டறியப் படின் 6 மாதங்களுக்கு முறையாக மருந்துகளை பயன்படுத்தினால் நோயை முற்றாக குணமாக்க முடியுமெனவும் டாக்டர் சுதத் சமரவீர மேலும் தெரிவித்தார். (அ-2)

# உருவச் சிலை திரைநீக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரி ஸ்தாபகர் வணக்கத்துக்குரிய ஜேம்ஸ் லிஞ் இன் உருவச் சிலைக்கான திரை நீக்க நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. கல்லூரியின் றொமையின்குக் மண்டபத்தின் முன் அமைக்கப்பட்டுள்ள இவ் உருவச் சிலையை கல்லூரியின் பழைய மாணவனும் இலங்கை மெதடிஸ்த பேரவைத் தலைவருமான வணக்கத்துக்குரிய கலாநிதி ஏ.டபிள்யூ ஜெபநேசன் திரைநீக்கம் செய்து வைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்த ஐவரின் உருவப்படங்களும் திரைநீக்கம் செய்யப்படவுள்ளன.

இச் சிலை மற்றும் உருவப் படங்களை மத்தியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் கலைமாமணி எஸ்.சிவப்பிரகாசம் உருவாக்கியுள்ளார். (அ-5)

# வடக்கில் தேர்தல் நடைபெறக்கூடிய சூழலை ஏற்படுத்தியது படையினர்தான்

## அமைச்சர் தினேஷ் தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை இன்று கடுமையாக விமர்சிக்கும் இதே பாதுகாப்பு தரப்பினர் தான் ஒரு காலத்தில் அவரின் உயிரைக்காப்பாற்றி அவரை தேர்தலில் வெற்றி பெற வைத்தனர். அதனை இன்று சம்பந்தனும் அவருடன் கூட உள்ளவர்களும் மறந்துவிட்டனர் என்று ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமானதினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

வடக்குத் தேர்தல் காலத்தில் இராணுவத்தினரை முகாம்களுக்குள் முடக்க வேண்டும் என்று கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஜனாதிபதி மஹிந்தராஜபக்சவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தேர்தல் பிரசாரத்தை இலக்கு வைத்து சம்பந்தன் வெளியிடும் கூற்றுக்கள் எமக்கு ஆச்சரியமளிக்காவிடினும் கவலையளிக்கின்றன. பாதுகாப்புத் தரப்பினர் தமது உயிரைத் தியாகம் செய்து சம்பந்தனை பாதுகாத்து வெற்றிபெற வைத்துள்ளனர்.

புலிகள் சுதந்திரமாக இருந்த காலத்தில் வடக்குத் தேர்தலை நடத்த வேண்டும் என்று சம்பந்தன் கேட்டதில்லை.

ஆனால் இந்த பாதுகாப்புத் தரப்பினர்தான் தமது உயிரைத் தியாகம் செய்து இன்று வடக்குத் தேர்தலை நடத்தும் சூழலை உருவாக்கிக் கொடுத்துள்ளனர்.

இந்நிலையில் இது சம்பந்தமாக உடனடியாக இராஜதந்திர ரீதியில் உறுதிமொழிகளை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் கடும் அழுத்தங்களுக்கு உள்ளாகி இருப்பதாக அரசாங்கத்தின் தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக லக்பிம கூறியுள்ளது.

இதனிடையே பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாடு தொடர்பாக கலந்துரையாட இந்திய பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கை செல்லவுள்ளது. (அ-2)




❖1795 - ஐக்கிய இராச்சியம் தென்னாபிரிக்காவின் கேப்டவுண் நகரைக் கைப்பற்றியது.

❖ 1810 - மிகுவேல் ஹிடால்கோ என்ற மதகுரு மெக்சிகோவின் விடுதலைப் போரை ஆரம்பித்தார்.

❖1812 - முதலாம் நெப்போலியன் மொஸ்கோவினுள் நுழைந்ததை அடுத்து ரஷ்ய மக்கள் நள்ளிரவில் நகரை தீயிட்டுக் கொளுத்தினர். மொஸ்கோ நகரம் அடுத்த சில நாட்களில் முற்றாக எரிந்தது.

❖1852 - லண்டனில் , மான்செஸ்டர் நகரில் உலகின் முதலாவது இலவச நூல் நிலையம் அமைக்கப்பட்டது.

❖ 1887 - மென்பந்தாட்டம் முதன் முதலில் சிக்காகோவில் விளையாடப்பட்டது.

❖1963 - மலாயா, சிங்கப்பூர் மற்றும் போர்ணியோவின் சாபா, சரவாக் ஆகியன இணைந்து மலேசியா உருவாக்கப்பட்டது.

❖1970 - ஜோர்தானில் நான்கு பயணிகள் விமானங்கள் பாலஸ்தீன தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதை அடுத்து மன்னர் ஹசெயின் இராணுவ ஆட்சியை அறிவித்தார்.

❖ 1975 -பப்புவா நியூகினி, அவுஸ்திரேலியாவிடமிருந்து விடுதலை பெற்றது.

❖1978 - ஈரானில் டபாஸ் நகரை 7.5 - 7.9 ரிக்டர் நிலநடுக்கம் தாக்கியதில் 25 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

❖1982 - லெபனானில் பாலஸ்தீன அகதி முகாம்களான சப்ரா, ஷட்டீலா ஆகியவற்றில் லெபனானிய இராணுவத் துணைப்படையினரால் ஆயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டனர்.

❖1987 - ஓசோன் படலத்தைப் பாதுகாக்கும் பிரகடனம் மொண்ட்றியால் நகரில் கைச்சாத்திடப்பட்டது.

❖2000 - இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப் உலங்கு வானூர்தி விபத்தில் உயிரிழந்தார்.

### பிறப்புகள்

❖1916 - எம். எஸ். சுப்புலட்சுமி, இந்திய கர்நாடக இசைப் பாடகர், (இ. 2004)

❖1923 - லீ குவான் யூ, சிங்கப்பூரின் முன்னாள் தலைவர்.

### இறப்புகள்

❖1736 - கப்றியேல் ஃபாரென்ஹைட், ஜேர்மனிய இயற்பியலாளர் (பி. 1686)

❖1824 - பதினெட்டாம் லூயி, பிரான்சின் மன்னன் (பி. 1755)

❖1932 - ரொனால்ட் றொஸ், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய மருத்துவர் (பி. 1857)

❖1994 - சு. பொன்னம்பலம், யாழ்ப்பாணத்தின் பிர பல சத்திர சிகிச்சை நிபுணர் (பி. 1928)


❖1998 - கோ. கேசவன், தமிழியல் ஆய்வாளர் (பி. 1946)

❖ 2009 -தென்கச்சி கோ. சுவாமிநாதன், தமிழகப் பேச்சாளர், எழுத்தாளர்

### சிறப்பு தினம்

❖உலக ஓசோன் பாதுகாப்பு தினம்

### தென்கச்சி கோ. சுவாமிநாதன்



தென்கச்சி கோ. சுவாமிநாதன் புகழ்பெற்ற பேச்சாளரும், எழுத்தாளரும் ஆவார். அரியலூர் மாவட்டம் தென்கச்சிப்பெருமாள் நத்தம் என்ற ஊரில் பிறந்த கோ. சுவாமிநாதன் வேளாண்மைப் பட்டதாரி ஆவார். நெல்லை வானொலியில் அறிவிப்பாளர் பணியைத் தொடங்கியவர். சென்னை வானொலி நிலையத்தில் இன்று ஒரு தகவல் நிகழ்ச்சி வழியாக உலகத் தமிழர் உள்ளங்களில் நிலையான இடம் பிடித்தவர். திரைப்படங்களிலும் தொலைக்காட்சி யிலும் நடித்தவர்.

அகில இந்திய வானொலியில் உதவி இயக்குநராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். தொலைக்காட்சியில் 'இந்த நாள் இனிய நாள்' என்ற நிகழ்ச்சியை நடத்தி வந்தார். பல சிறுகதைகளையும் எழுதியிருந்தார்.

இவர் தமிழ்நாடு அரசுப் பணியில் விவசாய அலுவலராக வாழ்க்கையைத் தொடங்கினார் பின்னர் 1977 முதல் 1984 வரை திருநெல்வேலி வானொலி நிலையத்தில் பணிபுரிந்தார். அகில இந்திய வானொலியில் வேளாண்மை நிகழ்ச்சிப் பிரிவு இயக்குநராக இருந்தபோது "வீடும் வயலும்" என்ற சிறப்பான நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். "அன்பின் வலிமை", "தீயோர்" மற்றும் "அறிவுச்செல்வம்" உட்பட பல நூல்களை எழுதியுள்ளார். "இலக்கணம்" என்ற திரைப்படத்திலும் நடித்துள்ளார்.

## வாக்காளர் அட்டைகள் அஞ்சல் அலுவலகங்களில்

மத்திய, வடக்கு மற்றும் வடமேல் ஆகிய மூன்று மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் விநியோகம் கடந்த வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்துள்ளன. இந்த வாக்காளர் அட்டை கள் உத்தியோகபூர்வமாக கடந்த மாதம் 28 ஆம் திகதி முதல் கடந்த வெள்ளிக்கிழமை வரை தபால் ஊழியர்களினால் வீடு வீடாக சென்று விநியோகிப்பட்டு வந்தது. இக்கால பகுதிக்குள் வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் அருகிலுள்ள அஞ்சல் மற்றும் உப-அஞ்சல் அலுவலகங்களுக்கு சென்று தமது ஆள் அடையாளத்தை காண்பித்து தமக்குரிய வாக்காளர் அட் டையை பெற்றுக் கொள்ள முடியும் என தபால் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ-2)


Sri Lankan Chartered [இலங்கை பட்டயக்கணக்காளர் ] கற்கைநெறி
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்
அதி சிறந்த வசதிகளுடன்/கூடிய முற்றிலும் மாறுபட்ட முறையில்

(சி/4727)

CA THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS OF SRI LANKA

KAIMS

புதிய பிரிவுகள் 25th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA 0773 722 104, 021 221 9422
COLOMBO 0772 555 814



மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
Yaarl Kalaa layah Academy
Victoriya Road, Jaffna

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

கேக் ஐசிங், உணவு தயாரித்தல் Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும் முக அழகுக் கலை (Facial) Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்) Nail art, மெஹந்தி போடுதல் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல், (B)பிளவ்ஸ், சாறி (B) பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் தையல் பயிற்சிகள்.

ஆரம்பமாக உள்ள கிழமை நாள் /சனி ஞாயிறு புதிய பிரிவுகளில் சேர விரும்புவோர் நேரில் வந்து விபரங்களை கேட்டு அறிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இயக்குநர்



### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு
### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு 2012/2013 (வெளிவாரி)**
**Bachelor of Business Management (Online) Degree Programme-2012/2013 (External)**

**புதிய அனுமதிக்கான தெரிவுப் பரீட்சை - 2012**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தினால் வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகினூடாக நடத்தப்படும் தமிழ் மொழி மூலமான மூன்று வருடகால இணையவழி வியாபார முகாமைத்துவமாணிக் கற்கை நெறிக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள் :**

✦ க.பொ.த. (உ/த) பரீட்சை -2011 அல்லது அதற்கு முன்னர் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியானவர்கள்

**அல்லது**

✦ பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளக்கூடிய க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு சமமான வேறு தகைமையைக் கொண்டவர்கள்.

**முக்கிய குறிப்பு:-** இலங்கைப் பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பொன்றுக்காக பதிவு செய்தவர்கள் விண்ணப்பிக்கலாகாது.

மாணவர் தெரிவு:

விண்ணப்பதாரிகள் பொது உளச்சார்புப் பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சை அல்லது இரண்டும் மூலம் தெரிவு செய்யப்படுவர். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களைப் பெறுதல்:**

1. விண்ணப்பப்படிவத்தினை நேரடியாக பெற விரும்புவோர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில், விண்ணப்ப மற்றும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1000 ஐ செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்து யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் மற்றும் வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகில் இருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிதியாளருக்கு எழுதப்பட்ட ரூபா 1000 இற்கான காசுக்கட் டளை/தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 40.00 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 25X20 செ.மீ. அளவுடைய தபால் உறையுடன், உதவிப் பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ். பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ள முடியும்.

2. விண்ணப்பப்படிவத்தினை www.jfn.ac.lk/bbm எனும் இணைய முகவரியிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல்:**

விண்ணப்பங்கள் யாவும் உதவிப்பதிவாளர், வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் இணையவழி மூலமான வியாபார முகாமைத்துவமாணி பட்டப்படிப்பு என தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 11.10.2013 (விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்களுக்கு : 021 222 1106, 021 222 3610, 021 222 3612 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
12.09.2013

(சி/4712)



# மானிப்பாயில்... பஜாஜ் மோட்டார் சைக்கிள் விற்பனை காட்சியறை

RRS Motor Engineer

## திறப்பு விழா அழைப்பு

BAJAJ Distinctly Ahead

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் சேவை முகவர்

## றஞ்சித் மோட்டோர்ஸ்

**இன்று** மதியம் 12.00 மணியளவில் தமது காட்சியறையினைத் திறந்து வைக்கின்றனர்.
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியினால் இலங்கையில் எப்பாகத்திலும் விற்கப்படும் நியாய விலையிலேயே இங்கு கிடைக்கும்.



(எம்மிடம் கொள்வனவு செய்யப்படும் அனைத்து மோட்டார் சைக்கிள்களுக்கும் மேலதிகமாக இரண்டு சேர்வீஸ் வழங்கப்படும்)




இலவசம் அன்றைய தினம் கொள்வனவு செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களுக்கு

- எலக்ரிக்கல் ரைஸ் குக்கர்
- ஒரு சோடி முன் பிறேக் சூ
- ஒரு சோடி பின் பிறேக் சூ
- ஒரு ஒயில் கான்
- ஹெல்மெட்
- ஜாக்கட்

றஞ்சித் மோட்டோர்ஸ்,
றஞ்சித் றிப்பயறிங் அன் சேர்விஸ்
311, யாழ் வீதி, மானிப்பாய்.
தொலைபேசி : 0773107549, 0772269883, 0212255228

(C-4726)

## வட மாகாண சபைத் தேர்தல் -2013

# கிளிநொச்சி மாவட்டம்



அன்புத் தம்பி பிரபாகரனுக்கு என
விளித்து கடிதம் எழுதி
பேரிழப்புக்களைத் தடுக்கப்
பெரும் முயற்சிசெய்த **வீ. ஆனந்தசங்கரி ஐயா**
**நேர்மையானவரா?**
போரில் ஏற்பட்ட இழப்புக்களிற்குப் பின்பு
விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
**விமர்சிப்பவர்கள் நேர்மையானவர்களா?**
கிளிநொச்சி மாவட்டத்தின் வாக்காளப் பெருமக்களே!
நீங்கள் தமிழுக்காக இழப்புக்களை அனுபவித்த வீர மறவர்கள்
உங்களால் நேர்மையாளர்களை நிச்சயம் இனம் காணமுடியும்.
**ஆகையால் உங்கள் வாக்குகள்**

**தமிழினத்தின் மூத்த அரசியல் தலைவர்**

# வீ. ஆனந்த சங்கரிக்கே

## இலங்கைத் தமிழரசுக் கட்சி

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு

அதிகூடிய
விருப்பு வாக்குகளால்
இவரை வடக்குமாகாண
சபைக்கு அனுப்பி வைப்போம்

X 2

(EC-4879)



# மாபெரும் தேர்தல் பிரசாரக் கூட்டம்
# வடமாகாண சபைத் தேர்தல்-2013

## முல்லைத்தீவு மாவட்டம்

**இடம்:- அம்மன் கோயில் முன்றல், புதுக்குடியிருப்பு, காலம்:-17.09.2013 செவ்வாய்க்கிழமை**

**நேரம்:- மாலை 5.00 மணி, தலைமை:- எஸ்.வினோநோதராதலிங்கம்** (பாராளுமன்ற உறுப்பினர்)

**உரையாற்றுவோர்:**

- திரு.இரா. சம்பந்தன்- பாராளுமன்ற உறுப்பினர்
  (தலைவர்-தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)
- திரு. மாவை சேனாதிராசா- பாராளுமன்ற உறுப்பினர்
- திரு. சி.வி.விக்னேஸ்வரன்- வடமாகாண முதலமைச்சர் வேட்பாளர்
- திரு.செல்வம் அடைக்கலநாதன்- பாராளுமன்ற உறுப்பினர்
- திரு.சுரேஷ் பிரேமச்சந்திரன்- பாராளுமன்ற உறுப்பினர்
- திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன்- முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
- திரு. வீ.ஆனந்தசங்கரி- முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

X

(EC/4886)

இவர்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். முல்லை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுகமும் இடம்பெறும்.

**முல்லை மாவட்ட மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

# சிலருக்கு வாக்காளர் அட்டைகள் இதுவரை கிடைக்கவில்லை

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தின் வாக்காளர்களுக்கான வாக்களிக்கும் அட்டைகள் பெருமளவில் இதுவரையில் வழங்கப்படவில்லை எனவும் தபாலகங்களில் இவற்றை பெற்றுக் கொள்வதாயின் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் பொதுமக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'வடமாகாண சபைத் தேர்தலுக்கு இன்னமும் 5 நாட்களே இருக்கின்ற நிலையில் இன்னமும் இவ் அட்டைகள் பலரை சென்றடையவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேர்தல் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப் பெறாதோர் தபாலகங்களில் இவற்றை பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இடப்பெயர்வினால் தமது உறவினர், நண்பர்கள் வீடுகளில் வசித்து வருவோர் தமக்கான வாக்காளர் அட்டைகளைப் பெறுவதற்கு பல மைல் தூரம் சென்று பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வாக்காளர் அட்டைகளை தமக்கு வழங்கி வாக்களிக்கும் உரிமையை தமக்கு பெற்று த்தர உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

இதேவேளை மேலும் தமக்கு விரைவில் வாக்காளர் அட்டை வழங்கப்படும் என தொடர்ந்து காத்திருப்பதாகவும் தெரியவருகிறது. (அ- 5)





# நாட்டின் அபிவிருத்தி வேலைகளை கடன் பெற்றே செய்கின்றோம்

## 10,20 வருடங்களில் மீளசெலுத்த வேண்டும் என்கிறார் ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண சபைத்தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவரை ஏன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தெரிவு செய்தனர் என்பது எனக்குத் தெரியவில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.**



யாழ்.துரையப்பா விளையாட்டரங்களில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு,

எங்களுடைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இன, மத,குல, மாகாண பேத பார்க்காத பரந்த, ஆழமான அரசியல் கூட்டமைப் பாகும்.

நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட வேளையில்தான் முழு இலங்கையிலும் உள்ள மக்கள் வாக்களித்திருந்தனர்.

வடபகுதியில் வாழ்கின்ற மக்கள் தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்வது இந்தப் பகுதியின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்காகத்தான் வடக்கு மாகாண தேர்தலை நடத்துகின்றோம்.

அந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவரை ஏன் முதலமைச்சர் வேட்பாளராக தெரிவு செய்யவேண்டும் என்ற காரணம் எனக்குத் தெரியவில்லை.

தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் வடக்கு மாகாணத்தை நிர்வகிக்க முடியாது என இவ்வளவு காலமாகக்கூறி வந்தார்கள். ஆனால் இப்பொழுது தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவரை வடக்குத் தேர்தலில் நிறுத்தியுள்ளனர்.

நான் இன்று (நேற்று முன்தினம்) ஓமந்தையிலிருந்து யாழ்தேவி புகையிரதம் மூலம் கிளிநொச்சிக்கு பயணம் செய்தேன்.

நான் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் யாழ்தேவி புகையிரதம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு வருவேன் என்பதை உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன்.

எனவே நண்பர்களே! பாடசாலைகளை நாம் அமைக்கினும் மின்சாரத்தை வழங்கினும் இப்படி எந்த அபிவிருத்தி வேலைகளுக்கும் பணம் முக்கிய தேவையாகும். அந்தப் பணம் எமக்கு எப்படிக் கிடைக்கிறது. எமக்கு எதுவும் சும்மா கிடைக்கவில்லை. வேறு நாடுகளிலிருந்து கடன்பெற்றே அபிவிருத்திகளுக்கு பயன்படுத்துகிறோம். இக்கடன்களை 10 அல்லது 20 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும். ஆனால் சிலர் எமக்கு அபிவிருத்திக்கான பணம் முழுவதும் இனாமாக கிடைத்ததாகக் கதை கூறுகின்றனர் என்றார். (அ-6-4)

# சாவகச்சேரி பிரதேசத்தில் கட்டாக்காலிகள் தொல்லை

சாவகச்சேரி கோயில் குடியிருப்பு, பெரிய மாவடி, சப்பச்சி மாவடி ஆகிய பிரதேசங்களில் கட்டாக்காலிகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். மேற்படி கிராமங்களில் இரவு வேளைகளில் தோட்டங்களுக்குள் புகும் கட்டாக்காலிகள் விவசாயச் செய்கைகளை நாசமாக்குவதனால் பெரும் நட்டம் அடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். அத்தோடு பிரதான வீதிகளிலும் கட்டாக்காலிகள் பரவலாக அலைந்து திரிவதனால் இரவு வேளைகளில் போக்குவரத்தை மேற்கொள்வோர் சிரமங்களுக்குட்படுகின்றனர்.

இவ்வாறு கடந்த வருடமும் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்து காணப்பட்ட நிலையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் அறிவித்ததன் பிரகாரம் அதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலகத்தினர் மேற்கொண்டு தீர்வைப் பெற்றுக் கொடுத்தனர். ஆகையால் கடந்த வருடங்களைப் போன்று தற்பொழுதும் கட்டாக்காலிகளின் தொல்லைகளை நீக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-29)

# இராமலிங்க வித்தியின் கல்வி கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யா/ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயத்தின் ஆரம்ப, இடை நிலைப் பிரிவுக்கான கல்விக் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும் இக்கல்விக் கண்காட்சியில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார். (அ-5)

# நிவாரண விநியோகம்

வரணிப் பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் விதவைகள் மற்றும் விசேட தேவையுடையோருக்கான இம்மாதத்திற்கான நிவாரண விநியோகம் வரணி இ-9 கிளையில் வழங்கப்பட்டு வருகிறது. பயனாளிகள் நிவாரணங்களை எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ-9-29)

# யாழ்.பல்கலைக்கழக கல்லூரிக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

க.பொ.த உயர்தரத்தில் சித்தி பெற்று பல்கலைக்கழக வாய்ப்பை இழக்கும் மாணவர்களுக்காக நாடளாவிய ரீதியில் அமைக்கப்படவுள்ள 25 பல்கலைக்கழக கல்லூரிகளை அமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்.பல்கலைக்கழக கல்லூரிக் கான அடி க்கல் நாட்டும் வைபவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் இதுவரையில் 7 பல்கலைக்கழக கல்லூரிகள் அமை க்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இக் கல்லூரிகளில் 40 டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதோடு அதில் 30 பாடநெறிகள், புதிய பாடநெறிகள் முதன்முதலாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதன்படி யாழ்ப்பாண பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள இப்பல்கலைக்கழக கல்லூரியின் தமிழ் மாணவர்கள் டிப்ளோமா பாடநெறிகளை சிறந்த முறையில் பூர்த்தி செய்து கொழும்பு இரத்மலானை தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் மூலம் தேசிய தொழில் தகைமை தரத்திலான பட்டப் படிப்பை கற்கும் வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)



# தேர்தல் கண்காணிப்பாளர்கள் பல்வேறு தரப்பினருடன் சந்திப்பு

(கொழும்பு)

மூன்று மாகாண சபை தேர்தல்களையும் கண்காணிப்பதற்கு இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச கண்காணிப்பாளர்கள் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப் பிரியவை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடு பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சந்திப்பு நேற்று மாலை தேர்தல் திணைக் களத்தில் இடம் பெற்றது. இந்தச் சந்திப்பின் போது தேர்தல் ஒழுங்கு விதிகள், மாகாண சபைகளின் வரலாறு மற்றும் புவியல் தரவு கள் உள்ளிட்ட விடயங்கள் பற்றி தேர்தல்கள் ஆணையாளர் தெளிவுபடுத்தியுள்ளார்.

சர்வதேச கண்காணிப்பாளர்கள் 13 பேர் இரண்டு குழுக்களாகவே கடந்த 13 ,14 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வருகை தந்தனர்.

வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபை தேர்தல்களையே இவர்கள் கண்கா ணிக்கவுள்ளனர்.

இந்தத் தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் இவர்கள் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் இடை யில் நேற்று காலை சந்தித்துள்ளதாக தேர்தல் கள் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தெற்காசிய தேர்தல்கள் கண்காணிப்பாளர்கள் குழுவிற்கு தலைமை தாங்கும் இந்திய முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நேற்று இலங்கை வந்தடைந் துள்ளதாக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் சட்ட மீறல்கள் தொடர்பில் 122 பேர் கைது செய்யப்பட்டுள்ள தாகவும் பொலிஸ் தலைமையக தேர்தல் முறைப் பாட்டு பிரிவிற்கு இது தொடர்பில் 141 முறைப் பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் ஊட கப் பிரிவு குறிப்பிட் டுள்ளது. (அ-2)

# மேற்குலக நாடுகளுக்கு போதிய விளக்கமில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

போதியளவு விளக்கமின்றி மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிராக குற்றச்சாட்டுக் களை சுமத்தி வருவதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சீன அரச தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகை யில்,

ஸ்திரமான வலுவான ஒரு அரசாங்கத்தின் மூலமே நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். போதியளவு தெளிவின்றி சில மேற்கு லக நாடுகள் இலங்கை மனிதவுரிமை நிலை மைகள் குறித்து குற்றம் சுமத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார். விமர்சனம் செய்வது மிகவும் சுலபமானது எனவும் போதியளவு தெளி வின்றி மேற்குலக நாடுகள் விமர்சனம் செய் து வருவதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் மிக நீண்ட காலமாக உறவுகள் இருந்து வரு வதாக தெரிவித்துள்ள அவர் கல்வி, கலை, கலாசாரம், பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான உற வுகள் காணப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# யுத்த காலத்தில் இரு தரப்பும் சர்வதேச சட்டங்களை மீறின

## கே. பி. தெரிவிப்பு

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் இரண்டு தரப்பினருமே(புலி தரப்பு– அரச தரப்பு) சர்வ தேச சட்டங்களை மீறிச் செயற்பட்டதாக தமி ழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வ தேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநா தன் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர் பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தம் நிறைவடைந்து விட்டது. அதனால் அது பற்றி பேசுவது பயனில்லை. சர்வதேச யுத்த குற்றச் செயல் விசாரணைகள் நடத்தப்பட் டால் புலிகளுக்கு எதிராகவும் விசாரணை நடத்தப்பட வேண்டும். எனினும் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பும் புலம் பெயர் தமிழர்களும் அரசாங்கத்திற்கு எதிராக மட்டுமே விசார ணைகளை நடத்துமாறு கோரி வருகின்றன.

யுத்தக் குற்றச்செயல் விசாரணைகளி னால் யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

யுத்தம் என்ற ஒன்று இடம்பெற்றால் குற் றச் செயல்கள் இடம்பெறுவதை தவிர்க்க முடியாது என்பதே எனது நிலைப்பாடு.

தமக்கு அரசியலில் ஈடுபடும் திட்டம் எதுவும் கிடையாது என தெரிவித்துள்ள அவர், மனிதாபி மான பணிகளைத் தொடர்வதற்கே விரும்பு வதாக குறிப்பிட்டுள்ளார்.

நான் இப்போது ஆற்றி வரும் பணிகள் எனக்கு பெரும் திருப்தி அளிக்கின்றன.

பல ஆண்டுகளாக வெளிநாடுகளில் வாழ் ந்து வந்துள்ளதால் மேற்குலக நாடுகளின் சிறுவர் சிறுமியர் பல்வேறு வசதிகளை அனுப வித்து வருவதை கண்டுணர்ந்துள்ளேன்.

எனவே, இந்த நலன்களை இலங்கை வாழ் சிறுவர் சிறுமியருக்கும் வழங்குவதே எனது நோக்கம். யுத்தம் ஒருபோதும் நிம்ம தியைத் தராது என அவர் மேலும் தெரிவித் தார். (அ-2)

# மூன்றாம் கட்ட விடைத்தாள் மதிப்பீடு 25 இல் ஆரம்பம்

(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையின் மூன்றாம் கட்ட விடைத்தாள் மதீப்பீட்டுப் பணிகள் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளதாக பரீட்சை கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் மதீப்பீட்டுப் பணிகள் ஒக் டோபர் எட்டாம் திகதி நிறைவுபெறும் என பரீட் சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ. எம். என்.ஜே.புஸ்பகுமார கூறியுள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள் ளதால் மூன்றாம் கட்ட விடைத்தாள் மதீப்பீடு பணிகளை ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த தினத்தில் ஆரம்பிக்க முடியாமற் போயுள் ளது.

இம்முறை உயர்தரப் பரீட்சையின் முதற் கட்ட விடைத்தாள் மதீப்பிட்டுப் பணிகள் ஓக ஸ்ட் மாதம் 27 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றன.

கடந்த மூன்றாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் அண்மையில் நிறைவுபெற்றன.

உயர்தரப் பரீட்சையின் செயன்முறை பரீட்சைகள் ஒக்டோபர் மாதம் நடைபெறவுள் ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித் துள்ளது. (அ-2)



# வட மாகாணசபைத் தேர்தல் - 2013
## முல்லைத்தீவு மாவட்டம்

**நா. ரட்ணராஜா**
**(ரட்ணா/பெத்தையா)**

X 6



முன்னாள் முல்லை மாவட்ட
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்
"நியாப்" திட்ட உதவியாளர்,
"என்றிப்" மற்றும் மீள் எழுச்சித்திட்ட
பிரதித் திட்டப்பணிப்பாளர்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

(EC4868)

# வட மாகாணசபைத் தேர்தல் - 2013
## கிளிநொச்சி மாவட்டம்

**அ.விஜயகிருஷ்ணன்**
**(விஜயன்)**

X 2



முன்னாள்
பொருளாதார அபிவிருத்தி அமைச்சின்
"நியாப்", வடக்கின் துரித மீட்சித்திட்ட
மற்றும் மீள் எழுச்சித்திட்ட பிரதித் திட்டப்பணிப்பாளர்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி

ஒவ்வொருவருடைய இதயத்திலும் ஒரு குரல் தொனித்துக் கொண்டு இருக்கிறது. அதை அவன் மட்டுமே கேட்க முடியும். ஆயினும் அவன் சப்தமிடாதபடி அதன் தொண்டையை பிடித்து நெரித்து விட முடியாது. - ஆர்னோல்ட் பென்னட்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# நீங்கள் எதனால் அளக்கிறீர்களோ அதனால் நீங்களும் அளக்கப்படுவீர்கள்!

ஒருவர் மீது அவதூறு ஏற்படுத்தும் வகையில் இன்னொருவர் நடந்துகொள்வதை சட்டங்களால் ஒரு போதும் தடுத்து விடமுடியாது.

மாறாக, மனச்சாட்சி என்பதால் மட்டுமே இவற்றை தடுக்கவும் தவிர்க்கவும் முடியும்.

இப்போது யாருக்கும் யாரும் வசை கூறலாம் என்றளவில் நிலைமை மாறியுள்ளதெனில் மனச் சாட்சிக்கு மாறாக மக்கள் நடக்கப் பழகி விட்டார்கள் என்பதே அதன் பொருளாகும்.

எவருக்கும் எந்தப் பழியையும் சுமத்தி அவர வருக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்க முடியும் என்ற கலாசாரம் போராட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்ற காலங்களில் இருந்து ஊடுருவியது எனலாம்.

இத்தகைய போக்குகளால் சொந்தப்பகைமைக்கு தண்டனை பெற்றுக்கொடுத்து திருப்தி அடைந்த பாவத் தனங்கள் இந்த மண்ணில் நிறையவே உண்டு.

இது மட்டுமல்ல, இல்லாத பொல்லாத குற்றச் சாட்டுக்களைக் கூறி நீதியான – நேர்மையான – கபடத்தனம் அறியாதவர்களைச் சுட்டு வீழ்த்திய பாவச் செயல்களும் இந்த மண்ணில் நடந்தது என்ற உண்மைகளை எவரும் மறுக்க முடியாது.

புலிகளுக்குப் போட்டுக்கொடுத்து முடித்துக் கட்டிய அதே கொடும் நெஞ்சர்கள் மறுதரப்புக்கும் தகவல் கொடுத்து அதன் மூலமும் சுட்டு வீழ்த்தினர்.

இந்தப் பாவகாரியங்கள் ஊழ்வினையாக வந்து நம்மை உறுத்தி நிற்கிறது.

இக் கொடுஞ்செயலில் எங்கள் அரசியல் வாதி களும் குறைந்தவர்கள் அல்ல.

தாம் தாம் பதவிகளைப் பெறுவதற்காக அண்டல் களும் கோள்களும் கட்டிவிடப்பட்டன.

இத்தகைய சுயநல அரசியல்வாதிகளின் உள் ளார்ந்தத்தைப் புரிந்து கொள்ளாமல் போராட்ட அமைப் புகளும் எழுந்தமானமாக நடந்து கொண்டதன் விளை வாக, நேர்மையான தமிழ் அரசியல் தலைவர்களை தமிழ் மக்கள் இழக்க வேண்டியதாயிற்று.

இத்தகைய துன்பத்தின் மத்தியில்; நீ எதனால் அளந்தாயோ! அதனால் நீயும் அளக்கப்படுவாய்! என்ற புனித விவிலியத்தின் தத்துவமும் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையின் அடிப்படையை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனை எதிர்ப் பதற்காக அவர் எத்துணை நுட்பங்களை முன்வைத் தார் என்பதை ஆராய்ந்தால், உங்களில் சிலர் முன்பு தமிழ் அரசியல் தலைவர்களுக்கு செய்த வினையைத் தான் இப்போது அவர் உங்களுக்குச் செய்கிறார்.

மாவை சேனாதிராஜாவை வடக்கின் முதன்மை வேட்பாளராக ஆக்கியிருக்க வேண்டும் என ஜனாதி பதி கூறியதற்கு உட்பொருள் கொடுக்க முற்பட்டால்,

ஓய்வுபெற்ற நீதிய ரசர் விக்னேஸ்வரன் முதன்மை வேட்பாளராக வருவதை எதிர்த்தவர்கள் ஜனாதிபதி யின் ஆலோசனையின்படிதான் எதிர்த்தார்களா? என்று கேள்வி எழுப்பினால் நிலைமை என்னவாகும்.

ஆகையால், தமிழ் அரசியல்வாதிகள் இனி மேலும் அண்டல் போடுவதை விடுத்து நேர்மையான அரசியல் நடத்த முன்வரவேண்டும்.

இல்லையேல் நீங்கள் மக்கள் மத்தியிலிருந்து தூக்கி எறியப்படுமளவில் அண்டல் போடுவதற்கு ஆளையும் அதற்கான சந்தர்ப்பத்தையும் அந்த ஆண்டவனே ஏற்பாடு செய்வான் என்பதை ஒருபோதும் மறக்காதீர்கள்.

உண்மையாகவும் நேர்மையாகவும் தமிழ்ப் பற்றோ டும் அரசியல் நடத்த சத்தியம் செய்து கொள்ளுங்கள்.

இழப்புக்களால், அழிவுகளால் அழுது புலம்பும் எங்கள் தமிழ் மக்கள் மத்தியில் இது உங்களுக்கு மிகவும் அவசியம்.

## இந்தியாவின் நான்கு உற்பத்தி நிறுவனங்களுக்கு இலங்கையில் தடைவிதிப்பு

இலங்கைக்கு மருந்துகளை இறக் குமதி செய்யும் இந்தியாவின் நான்கு மருந்து உற்பத்தி நிறுவனங்களை இலங்கை சுகாதார அமைச்சு உடனடி யாக அமுலுக்கு வரும் வகையில் தடை செய்துள்ளதாக அமைச்சர் மைத்திரி பால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் Laborate Pharma , Vivek Pharma, Bafna Pharmaceuticals, Elysium Phar maceuticals ஆகிய இந்திய நிறு வனங்களிடம் இருந்து மருந்தை இலங் கைக்கு இறக்குமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இந்திய நிறுவனங்கள் கடந்த நான்கு வருடங்களாக தரமான மருந்துகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய தவறியதன் காரணமாகவே அந்த நிறுவனங்க ளுக்கு இத் தடையை விதித்துள்ளதாக அமைச்சர் தெரிவித் தார். (அ-2)

## கொழும்பு நகருக்குள் நுழையும் வாகனங்களுக்கு கட்டணம்

வெளியிடங்களிலிருந்து கொழும்பு நகருக்குள் நுழையும் சகல வாகனங்க ளும் கட்டணமொன்றை அறவிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தில் இதனை உள் ளடக்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக தற்போது அதிகாரிக ளுக்கிடையே கலந்துரையாடலொன் றும் இடம்பெற்று வருவதாக தெரிவிக் கப்பட்டுகின்றது.

இந்தத் திட்டத்திற்கமைய காலி வீதி, கண்டி வீதி மற்றும் நீர்கொழும்பு வீதி அடங்கலாக கொழும்புக்குள் வாகனங் கள் நுழையும் சகல வீதிகளிலும் இதற் காக விசேட நிலையங்களை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைக்கப்படும் நிலை யங்களில் கட்டத்துக்கான பற்றுச்சீட்டுக் கள் விநியோகிக்கப்படவுள்ளதுடன் அந் தப் பற்றுச்சீட்டை வாகனங்கள் கொழும்பு நகரிலிருந்து வெளியேறிச் செல்லும் வரை கவனமாக வைத்திருக்க வேண்டிய நடைமுறை பின்பற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டுக் கான வரவு செலவுத் திட்டம் தயாரிப்பதற் கான யோசனைகள் கோரப்பட்ட வேளை யில் கொழும்பு மாநகரசபையின் வருமான த்தை அதிகரிக்கும் வகையில் இந்த யோசனைத் திட்டம் முன்வைக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## சிறைவைக்கப்பட்டிருந்த பெண் 16 வருடங்களின் பின் மீட்பு

சவுதி அரேபியாவிலுள்ள வீடொன் றில் 16 வருடங்களாகச் சிறை வைக் கப்பட்டிருந்த இலங்கைப் பணிப் பெண் ஒருவர் மீட்கப்பட்டுள்ளார்.

நுவரெலியாவில் இருந்து தொழில் நிமிர்த்தம் அரேபியாவுக்கு சென்றிரு ந்த பெண் ஒருவரே மீட்கப்பட்டுள்ள தாக வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இப் பெண் தற்போது சவுதி அரேபி யாவிலுள்ள இலங்கை தூதரக அதிகா ரிகள் பாதுகாப்பில் இருப்பதாக பணி யகத்தின் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொது முகாமையாளருமான மங்கள ரன்தெனிய கூறியுள்ளார்.

மீட்கப்பட்ட பணிப் பெண் நுவரெலியா விலுள்ள அவரது உறவினர்களுடன் ஸ்கைப் ஊடாக உரையாடுவதற்கு சந் தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## மரமொன்றின் மீது ஏறி கைதி எதிர்ப்பு

அனுராதபுரம் சிறைச்சாலையில் மரமொன்றின் மீதுஏறி எதிர்ப்பில் ஈடு பட்ட கைதியை வாரியபொல சிறைச் சாலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா சிறைச்சாலைக்கு தம்மை அனுப்புமாறு கோரியே குறித்த கைதி நேற்று முன்தினம் எதிர்ப்பில் ஈடுபட் டார்.

இந்தக் கைதி நேற்று முன்தினம் மாலை மரத்தில் இருந்து இறங்கி தமது எதிர்ப்பை நிறைவுசெய்ததாக அனுராதபுரம் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கூறி னார். (அ-2)

## ஹலாலுக்கு எதிராக மீண்டும் போராட்டம்

### பொதுபலசேனா எச்சரிக்கை

ஹலால் சான்றிதழ் தொடர்பாக தமக்கு வழங்கிய வாக்குறுதியை இல ங்கை அரசாங்கம் நிறைவேற்றத் தவறி யதால் ஹலாலுக்கு எதிரான போராட் டத்தை மீள ஆரம்பிக்கப் போவதாக சிங்களபௌத்த அடிப்படைவாத அமைப் பான பொதுபல சேனா எச்சரித்துள் ளது.

இது தொடர்பாக பொது பல சேனா வின் பொதுச் செயலாளர் வண கல பொட அத்தே ஞானசார தேரர் கருத் துரைக்கையில்,

தாம் இந்த விவகாரத்தைக் கவனித் துக் கொள்வதாக இலங்கை அரசாங் கம் வாக்குறுதி அளித்ததை அடுத்தும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக் கப்பட்டதை அடுத்தும் ஹலாலுக்கு எதிரான பரப்புரைகளை நிறுத்தியிருந் தோம்.

எமது உறுப்பினர்கள் தெரிவுக்குழு முன் தோன்றி சாட்சியமளித்தனர். ஆயி னும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

விரைவில் இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபாய ராஜபக்சவை சந்திப்போம்.

அதற்குப் பின்னர் ஹலால் சான்றி தழ் நடைமுறைக்கு எதிரான பரப்புரை களை மீளத் தொடங்குவது குறித்து முடி வெடுப்போம்.

கண்டியில் இம்மாத இறுதியில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கத் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (அ-2)

## தொலைபேசி உரையாடலுக்கு அபராதம்

பாதைகளைக் கடக்கும் போது கைத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டு செல்லும் பாதசாரிகளுக்கு அபராதம் அறவிடப்படும் என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இதற்கான சட்டம் இந்த வாரம் முதல் இறுக்கப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

பாதையை கடந்து செல்லும் போது ஏற்படுகின்ற விபத்துக்களுக்கு கைத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டு பாதையில் கவனம் இன்றி செல்வதும் ஒரு முக்கியமான காரணமாக கருதப்படுகி றது.

இந்த நிலையில் இவ்வாறு தொலை பேசியில் உரையாடிக்கொண்டு பாதையை கடக்க முற்படுபவர்கள் முதலில் எச்சரிக் கப்படுவதுடன் பின்னர் அவர்களிடமிருந்து அபராதமும் அறவிடப்படவிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### ஆன்மநேய ஒருமைப்பாடு



என்னை உடலளவில் குறுக்கிக்கொண்டிருந்தபோது என்னை எது எதனோடோ, யார் யாருடனோ ஒப்பிட்டுக் கொண்டேன். அப்போது நான் பெரியவன். நான் வல் லவன், நான் செல்வன், நான் அழகன் என்றெல்லாம் தருக்கு வந்தது. ஒப்பு உவமையில்லாத ஒரு பெரிய பொருளாக நானே இருக்கும் நிலையை உணர்ந்து கொண்டு விட்டபோது எதனோடு என்னை ஒப்பிட்டுத் தருக்குவது? ஆணவம் எழக் கார ணமே இல்லையே!

நானே பிரம்மமாக இருக்கிறேன். பிரம்மமே எல்லாமாக இருக்கிறது என்னும் போது எல்லாமே நானாக இருக்கும் நிலையையும் நானே எல்லாமாய் இருக்கும் நிலையையும் நான் உணர்ந்தபோது எதனோடு என்னை ஒப்பிட்டு என்னை எடைபோட்டுக்கொள்வது? நான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் ஒருங்கே ஒழியும் இடம் நான் யார்? என்ற, நான் பிரம்மம் என்ற தெளிவுதான்.

இந்த இடத்தில்தான் Intutive Love பிறக்கிறது. இந்த இடத்தில் தான் பெரியவர்கள் சொல்லிப்போன ஆன்மநேய ஒருமைப்பாடு மலர்கிறது. இந்த இடத்தில்தான் வந்த வேலை முடிகிறது. இந்த இடத்தில் தான் அறிவுக்கு பூரணத்துவமும் அடக்கமும் அமைதியும் கிடைக்கின்றன. இந்த இடத்தில்தான் அன்பும் கருணையும் அருளும் இயல்பாகின்றன. இந்த இடத்தில்தான் அது உணர்வு பிறழாது காக்கும் வல்லமை கிடைக்கிறது. இந்த இடத்திற்கு எல்லோரும் வருவது எளிதே.

## கோட்டை ரயில் நிலையத்தில் கண்காணிப்பு கமராக்கள்

(கொழும்பு)


பயணிகளின் பாதுகாப்பு கருதி கொழும்பு கோட்டை புகையிரத நிலை யத்தில் கண்காணிப்பு (CCTV) கமராக் களை பொருத்த புகையிரத திணைக்களம் தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் அடுத்த மாதத்திற்குள் இந்த கண்காணிப்பு கம ராக்கள் பொருத்தப்படவுள்ளன.

இதனூடாக புகையிரத நிலையத்தில் நடைபெறும் அனைத்து நடவடிக்கை களையும் புகையிரதக் கட்டுப்பாட்டு அறையின் அதிகாரிகள் மற்றும் புகை யிரத நிலைய அத்தியட்சகர் கண்காணி க்க முடியும்.

அத்துடன் பயணிகள் புகையிரத்தில் ஏறும் போது அவர்களின் கையடக்கத் தொலைபே சிகள் பணம் ஆகியவற்றை கொள்கையிடும் கொள்ளையர்களை இலகுவில் அடையாளம் காண முடியும் எனவும் திணைக்களம் தெரிவித்துள் ளது. (அ-2)

# உணர்ச்சி பேச்சுக்களை மக்கள் நம்பக் கூடாது

## ஈ.பி.டி.பி வேட்பாளர் ரங்கேஸ்வரன்



(பருத்தித்துறை) மாகாண சபை முறைமையின் ஊடாக இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வை அடைய முடியும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அம்மையார் தெரிவித்துள்ளார்.

ஆனால் சர்வதேச சமூகம் இனப்பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுத் தரும் என மக்களை ஏமாற்றும் கூட்டமைப்பினரின் போலிப் பிரசாரங்களை அம்மையாரின் கூற்று தோலுரித்துக் காட்டியுள்ளது என பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் வடமாகாண சபை ஈ.பி.டி.பி. வேட் பாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வதிரி மல்லிகைத் தோட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு வந்து சென்றுள்ள சர்வதேசப் பிரதிநிதி நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கையின் அரசியல் தீர்விற்கான ஆலோசனையை கூறிவிட்டுச் சென் றுள்ளார்.

எனவே மக்கள் சிந்திக்க வேண்டும். உணர்ச்சியான பேச்சுக்களால் எமக்கு தீர்வு கிடைக்கப் போவதில்லை. கூட்டமைப்பினர் வசமுள்ள உள்ளூராட்சிமன்றங்கள் செயற்பாடுகள் இன்றி இருப்பதையும் சாதி மோத ல்கள், குழுச்செயற்பாடுகள் கட்சிக் கோஷ்டிகள் என பல்வேறு பூசல்கள் இவர்களுக்குள் இடம் பெறுவதால் இவர்களை நம்பி வாக்களிக்கும் மக்களுக்கு எவ்வித சேவைகளையும் இவர்களால் வழங்க முடியாது என்ற நிலையில் பல கூட்டமைப்பு உறுப்பினர்கள், உபதலைவர்கள் அரசுபக்கம் தாவியுள்ளனர். குறிப்பாக அம்பாறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் உட்பட வலிகாமம் மேற்கு , வலிகாமம் தெற்கு, யாழ்ப்பாண மாநகர சபை, பருத்தித்துறை பிரதேச சபை, கரவெட்டிப் பிரதேசசபை எனப் பலர் கட்சி தாவியுள்ளனர். இதனை மக்கள் நன்கு கண்டுள்ளனர்.

கூட்டமைப்பினருக்கு முன்னதாக வாக்களித்த மக்களுக்கு வாந்தியும் மயக்கமும் வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இத்தேர்தலில் தமது தோல்வியை தவிர்க்கும் முகமாகவே சர்வதேசத்திற்கு ஒற்றுமையைக் காட்ட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)










# நவிபிள்ளைக்கு 7 பேர் ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடர் எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை தொடர்பில் வாய்மொழி மூல அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளார்.


இலங்கைக்கு விஜயம் செய்த நவநீதம்பிள்ளை, இங்கு மேற்கொண்ட ஆய்வுகள் மற்றும் ஏனைய விடயங்களை உள்ளடக்கியதாக இது அமைய உள்ளது.

இந்த நிலையில், நவநீதம்பிள்ளைக்கு ஆதரவாக இலங்கையிலிருந்து ஏழு பேர், இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு இவர்கள் ஏழு பேரும் இந்த மாநாட்டில் நவநீதம்பிள்ளையின் அறிக்கைக்கு ஆதரவாக குரல் கொடுக்க உள்ளதாகவும் அந்த பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. இதனிடையே, இந்த அமர்வுகளில் பங்கேற்கும் இலங்கை மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இரண்டு அறிக்கைகளையும் சமர்ப்பிக்க உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(எ-4)

# தேர்தலை புறக்கணிக்கக் கூடாது

## மக்களிடம் ரணில் வேண்டுகோள்



எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலை மக்கள் புறக்கணிக்கக் கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார்.

வாக்காளர்கள் தேர்தல்களை புறக்கணிப்பது உசிதமாகாது என அவர் சுட்டிக காட்டியுள்ளார்.

தேர்தலை புறக்கணிப்பது அரசாங்கத்திற்கு சாதகமான நிலைமையை தோற்றுவிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் அரசாங்கம் அளித்த எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப் படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேர்தலை புறக்கணிப்பதானது அரசாங்கத்திற்கு ஒட்சிசன் வழங்குவதற்கு நிகரானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2014-ம் ஆண்டில் புதிய அரசாங்கமொன்றை அமைக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி பாரியளவில் போராட்டங்களை நடத்த உள்ளதாக ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பும் முதல் கட்டமாக 21-ம் திகதி மாகாண சபைத் தேர்தல் அமையும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.(எ-4)

# முல்லைத்தீவில் 'கோத்தபாய'

முல்லைத்தீவில் இலங்கை கடற்படை அமைத்துள்ள புதிய தளத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷவின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

கடற்படையின் இந்த தளத்திற்கு "எஸ்எல் என்எஸ் கோத்தபாய" தளம் என்று பெயரிடப்பட்டுள்ளதுடன் இந்த புதிய தளத்தை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜெயந்த கொலம்பகே திறந்து வைத்துள்ளார்.

முல்லைத்தீவில் இலங்கை கடற்படை 2011 ஜனவரி 13 ஆம் திகதி முகாம் ஒன்றை நிறுவியது.

தற்போது செம்மலை, நாயாறு, சிலாவத்தை பகுதிகளில் உள்ள கடற்படை முகாம்களுக்குப் பொறுப்பான தளமாக, "எஸ்எல் என்எஸ் கோத்தபாய" நிறுவப்பட்டுள்ளது என்று கடற்படை அறிவித்துள்ளது.(எ-4)

# அமெரிக்காவில்....

அணி திரளவுள்ளனர்.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐ.நா. முன்றலின் முன் பொங்கு தமிழ் ஒன்று கூடலாக தமிழர்கள் அணிதிரள இருப்பதோடு கனடாவில் மக்கள் பங்கெடுப்பதற்கான வாகன ஒழுங்குகளும் ஏற்பாடு செய்யப்படவுள்ளன. (எ-4)

## கடைசி போட்டியில்

# பாகிஸ்தானை வென்றது சிம்பாவே

# டெஸ்ட் தொடர் சமனிலை




பாகிஸ்தான் - சிம்பாவே கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஹராரே நகரில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற சிம்பாவே அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணி முதல இன்னிங்சில் 294 ஓட்டங்கள் சேர்த்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பின்னர் ஆடிய பாகிஸ்தான் அணியை முதல் இன்னிங்சில் 230 ரன்னில் சுருட்டியது சிம்பாவே.

64 ரன்கள் முன்னிலையுடன் 2-வது இன்னிங்சை ஆடிய சிம்பாவே அணி 4-வது நாள் ஆட்டத்தின் போது, 199 ரன்னில் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அதிகபட்சமாக துவக்க வீரர் மவாயோ 58 ரன்களும், மசகட்சா 44 ரன்களும் எடுத்தனர்.

இதனால் பாகிஸ்தான் வெற்றிக்கு 264 ரன்கள் என நிர்ணயிக்கப்பட்டது. இந்த இலக்கைத் துரத்திய பாகிஸ்தான் அணி, 4-ம் நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 158 ரன் எடுத்திருந்தது. மிஸ்பா உல்-ஹக் 26 ரன்னுடனும், அட்னன் அக்மல் 17 ரன்னுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் கடைசி நாள் ஆட்டத்தின போது தொடர்ந்து முன்னேறிய மிஸ்பா, அரை சதம் கடந்து வெற்றி வாய்ப்பை பிரகாசப்படுத்தினார். ஆனால் மறுமுனையில் ஆடிய வீரர்கள் சொற்ப ரன்களில் பவிலியன் திரும்பியதால் வெற்றிக் கனவு தகர்ந்தது. இதனால் பாகிஸ்தான் அணி 239 ரன்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. எனவே, 24 ரன்கள் வித்தியாசத்தில் சிம்பாவே வெற்றி பெற்றது.

பொறுப்புடன் ஆடிய் மிஸ்பா 79 ரன்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார். சிம்பாவே தரப்பில் சடாரா 5 விக்கெட்டுகளும் உத்சேயா 2 விக்கெட்டுகளும் கைப்பற்றினர்.

முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது. எனவே, 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் சமனிலையில் முடிந்தது. கடைசி போட்டியின் சிறந்த வீரராக சிம்பாவே வேகப்பந்து வீச்சாளர் சடாராவும், தொடர் நாயகனாக பாகிஸ்தானின் யூனிஸ்கானும் தேர்வு செய்யப்பட்டனர்.

சிம்பாவே , 1998-ல் பெஷாவரில் பாகிஸ்தானை வீழ்த்தியபின்னர் இப்போது அந்த அணியை சொந்த மண்ணில் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரசாரம்...

தாகவும் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, தேர்தல் பிரசார நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் தேர்தல் தொடரபில் எவ்விதமான செய்திகளையும் வெளியிடக்கூடாது .

தேர்தல் தொடர்பில் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களினால் முன்னெடுக்கப்படும் எந்தவொரு பிரசாரங்களையும் மேற்கொள் ளக் கூடாது எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதன்பிரகாரம் தேர்தல் பிரசாரங்கள், அரசியல் விளம்பரங்கள் மற்றும் அறிக்கைகள் எதிர்வரும் புதன்கிழமை நள்ளிரவு 12 மணி பின்னர் பிரசுரிப்பதற்கும், ஒலி மற்றும் ஒளிபரப்புவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் தேர்தல்கள் திணைக் களம் அறிவித்துள்ளது. (எ-4)

# ஜனாதிபதி...

சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் வட மாகாண சபை தேர்தலுக்கான பிரசார பணிகளில் ஜனாதிபதி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கலந்துகொண்டார்.

இதன்பின்னர் இரணைமடுவிலுள்ள செஞ்சோலை சிறுவர் இல்லத்திற்கும் அவர் விஜயம்மேற்கொண்டுள்ளார். அங்கு கே.பியை சந்தித்து கலந்துரையாடியதுடன் செஞ்சோலை சிறுவர் இலத்திலுள்ள சிறுவர்களுடனும் ஜனாதிபதி கலந்துரையாடியுள்ளார். (எ-4)

# தனிநாட்டைக் கோரவில்லை....

நிற்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டபோது நாங்கள் அதனை வழங்கவில்லை. அவர் களுக்கு நாங்கள் ஒரு முடிவு கட்டியிருக்கின்றோம்.

தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அதனை வழங்கத் தயாரில்லை என அவர் கூறியுள்ளார்.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் எதைக் கேட்டார்கள் என்று அவர் சொல்லவில்லை. நாங்கள் தற்போது எதனைக் கேட்கின்றோம் என்றும் அவர் சொல்ல வில்லை.

ஆனால் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துகின்ற வகையில் அவருடைய கருத்துக்கள் அமைநதுள்ளன.

எமது கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தினை அவர் படித்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதைக் கேட்கின்றது என்பது தெளிவாக அவருக்கு விளங்கியிருக்கும்.

ஒருமித்த நாட்டிற்குள் அடிமைகளாக இல்லாமல் தமிழர்கள் தங்களுடைய தலைவிதியைத் தாங்களே தீர்மானிக்கக்கூடியவர்களாகவும், கௌரவம், சுயமரியாதையுடன் தொடர்ந்து பாதுகாப்பாக வாழ்வதற்கு போதியளவு அதிகாரங்கள் சுயாட்சியின் மூலம் வழங்கப்பட வேண்டும் என்பதையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருகின்றது.

ஜனதிபதியும் தென்னிலங்கை தீவிரவாத சக்திகளும் கூறுவதைப் போன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றும் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக தனிநாட்டைக் கோரவில்லை எனவும் சம்பந்தன் பதிலளித்துள்ளார். (எ-4,6)

கண்ணீர் அஞ்சலி

எமது யாழ்.பல்கலைக்கழக சமஸ்கிருத துறை விரிவுரையாளர்

திரு S.பத்மநாபனின் தாயார்

திருமதி சர்வேஸ்வர ஐயா

சனிக்கிழமை (14.09.2013) காலமானார்.

அன்னாரை இழந்து நிற்கும் குடும்பத்தினருக்கு எமது துறை சார்பில் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

சமஸ்கிருத துறையினர்

(3959)

# அடக்குமுறை தொடர்ந்தால்....

ஆளும் வர்க்கத்தின் கெடுபிடியால்தான் முன்னர் நாம் ஆயுதமேந்தினோம். இனியும அது நீடிக்குமானால் மீண்டும் ஆயுதமேந்த வேண்டிவரும் என நாம் சர்வதேசத்திற்கும் எடுத்துரைப்போம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பணிமனையில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

மாகாண சபையினால் ஒன்றும் சாதிக்க முடியாது என ஆளுந்தரப்பு கூறிவருகிறது. இது தொடர்பில் த.தே.கூட்டமைப்பின் பதில் என்ன எனக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இராணுவம் இங்கு இருக்க வேண்டிய தேவையில்லை. இராணுவத்தின் அடக்குமுறைக்குள் தமிழ் மக்கள் வாழ விரும்பவில்லை.

தமிழ் மக்களிற்கு என எவ்விதமான தீர்வினையும் முன்வைக்காத அரசு எமது உரிமைப் போராட்டத்தினைக் கொச்சைப்படுத்தும் விதமாகவே கருத்துக் கூறிவருகின்றது.

புலிகள் கேட்டதனை நாம் கேட்கவில்லை. சமஷ்டியைத்தான் கேட்கின்றோம்.

அதனைச் சட்டம் படித்த ஜனாதிபதி புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களிடம் வாக்குக் கேட்கும் ஜனாதிபதி உட்பட ஆளும் வர்க்கம் தங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தினை வெளியிட வழியில்லாத நிலையில் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை விமர்சிக்கின்றது.

நாங்கள் கேட்பது ஒன்றும் சட்டத்திற்கு முரணானது அல்ல. சர்வதேச சட்டங்களுக்கு அமைவானவற்றையே கேட்கின்றோம்.

தனிப்பட்ட இடம், மொழி, சுயநிர்ணயம், கலாசாரம், பண்பாடு என்பவற்றினை கோருவதற்கான உரிமை எமக்குண்டு.

நான் இந்து பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அதில் நான் கூறியிருப்பது எமது பிரச்சினையை அரசியல் இலாபத்திற்காக பயன்படுத்த வேண்டாம் என்பதே தவிர தற்போது வெளி வந்துள்ள செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை.

அரசின் பொய்வார்த்தைகளினை சர்வதேசம் இனியும் நம்பத் தயாரில்லை. எனவே எம்மக்களும் அதனைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும் எனவும் முதன்மை வேட்பாளர் கேட்டுக் கொண்டார். (எ-4)

CIMA

அதி சிறந்த வசதிகளுடன் கூடிய
முற்றிலும் மாறுபட்ட முறையில் ,
தொழில் சார் கற்கைநெறியில் அனுபவம் உள்ள
விரிவுரையாளர்களுடன் CIMA-UK கற்கைநெறி
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

K-AIMS

புதிய பிரிவுகள் 25th September முதல்
கொழும்பு மற்றும் யாழ் விரிவுரையாளர்களுடன்

35-1/1, Upatissa Road, Colombo 04
3-1/2, Sirambiyadi Lane, Jaffna

JAFFNA
0773 722 104
021 221 9422

COLOMBO
0772 555 814

(சீ-4727)

# வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013 யாழ் மாவட்டம்

## அங்கஜன் இராமநாதன்

**MBA (International) B.Eng (Hons)**




நான் பொய் பேசுபவனல்ல
நான் தமிழர் பற்றியும்
தேசியம் பற்றியும் அதிகம்
பேசுவதில்லை என்பதை
ஒத்துக் கொள்கின்றேன்.

ஆனால்..!
உண்மையில் ஒரு தமிழர்
என்பதை யாரைக்
குறிக்கின்றது?
ஒவ்வொரு தமிழ்த் தனியாள்
சேர்ந்தே தமிழர்கள்
ஆகின்றார்கள்.
நான் இந்த தனி நபர்கள் பற்றியே
அக்கறை கொண்டுள்ளேன்.

அவர்களின் ஆளுமை பற்றி,
அவர்களின் வளமான
வாழ்வு பற்றி, அவர்களைச்
சாதனையாளர்கள் ஆக்குவது
பற்றி, அவரவர் தத்தமது
வாழ்க்கையில் வெற்றியடைய
செய்வது பற்றியே அதிகம்
அக்கறை கொண்டுள்ளேன்.

**எங்களின் நேர்மை**
**உங்களின் நம்பிக்கை**

முகப்புத்தகத்தில் தொடர...
www.facebook.com/angajan1

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.